# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்."

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு தைமாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 12 | 2-ம் இலக்கம்


# "உண்மையை ஓர்மத்துடன் கடைப்பிடித்து வாழுங்கள்"

## பரிசுத்த பாப்பரசரின் நத்தார்செய்தி



"இன்னும் நன்கு உருவாக்சப்படாத அல்லது தத்தளிக்கும் மனச்சாட்சிகளைச் சேதப்படுத்தும்படி, மனிதனுக்கு உண்மை மட்டில் இயல்பாயுள்ள நாட்டத்தைக் கெடுத்துவிடாதீர். இந்நாட்டத்திலேயே அவனுடைய பெருந்தன்மை தங்கியுள்ளது.

சமூகக்கட்டுப்பாடுகளின் அஸ்திவாரத்தைத் தகர்த்தல், குடும்பத்தைக் குலைத்தல், அன்பை அசுசிப்படுத்துதல், மதத்தைப் பரிகசித்தல் போன்றவற்றைப் பரப்புவதற்கு அஞ்சுங்கள்.

கூடிய ஆரோக்கியவாழ்விற்கும், கூடிய சுபீட்சத்திற்கும், கூடிய பாதுகாப்பிற்கும் அயராதுஉழையுங்கள்.

இரட்டிப்பான கருத்துள்ள சொற்களைப் பிரயோகிப்பதால் உண்மையை மறுதலிப்பவர்களை வெளியரங்கமாகக் கண்டித்த பரிசுத்தபிதா, ஒவ்வொருவரையும், வெளிப்படையாக உண்மையை நோக்கும்படியும், சிந்திக்கும்படியும், மதிக்கும்படியும், சொல்லும்படியும், எதுஉண்மையோ அதைச் செயலில்காட்டும்படியும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

மக்கள் சகலத்திற்கும் மேலாக எது உண்மையோ அதைச் சிந்திக்கவேண்டும் என்றுகூறினார். இன்னும் அவர்கள் தெய்வீக, மானிட உண்மைகளைப்பற்றி அதாவது தங்கள் இரட்சணியம், திருச்சபை, சன்மார்க்கம், சட்டதிட்டம், தத்துவசாஸ்திரம், கலைகள் முதலியவைகளைப்பற்றித் தெளிவான அறிவுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, கிட்டத்தட்ட நாளாந்தம் அமைதியைக் குலைக்கும் முன்னேற்பாடில்லாத விவாதங்கள் அல்லது எதிர்வாதாட்டங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன

ஏன் கிறிஸ்தவர்கள் உண்மையை மதிப்பதிலும், அதைப் பிறர் மதிக்கச் செய்வதிலும், கிறிஸ்தவ சீவியத்திற்கும், கிறிஸ்தவ நடைமுறைக்கும் முரணான முறையில் இளக்காரம் காட்டவேண்டும்? உண்மையை வேண்டுமென்று மாற்றுவோர்மட்டும் இவ்விஷயத்தில் குற்றவாளிகளல்ல.

### கண்டிக்கத் தகுந்தது

தாங்கள் பின்தாங்கியவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அஞ்சி, தங்கள் இருதலைப்பட்ட நடத்தையினால் உண்மைக்குத் துரோகஞ் செய்வோரையும், முந்தியவர்களைப்போல் குற்றவாளிகளாகக் கருதவேண்டும். திடமான அறிவுடைய ஒருவனைப் போல், உறுதியாக ஓர்மத்துடனும், அறிவுடனும், உண்மையை மதிக்கவேண்டும். பரிசுத்த பத்துக்கற்பனைகளுக்குமாருகப் பசாசின் சூட்சிகளைக் கொண்டுள்ள வேறு பத்துக்கற்பனைகளைப் பரிசுத்தபாப்பரசர் குறிப்பிட்டார். அதாவது, கொலைசெய், விபசாரம் செய், களவெடு, பொய்ச்சாட்சி சொல்லு முதலியன.

அவர் உலகவர்த்தமானங்களைப் பற்றிப் பேசியபொழுது, முன்ஒருபோதுமில்லாதவாறு உலகின் பலபாகங்களிலும் அமைதியின்மை தலை எடுத்திருப்பதாகவும், அது சமூக சட்டதிட்டங்களை மாத்திரமல்ல, பலபெலவீனமான, உறுதியற்ற ஆன்மாக்களையும் பயமுறுத்துவதாக அமைந்துள்ளது என்று கூறினார்.

அவர் உலகத் தலைவர்களை விழித்து: கிறிஸ்துவின் பேரால் இன்றைய பொதுஅபாயத்தில் நேர்மையாக நடந்துகொள்ளும்படி விண்ணப்பித்துக் கொண்டார். இது ஒரு பொதுநலனை அடிப்படையாகக் கொண்டதால் இதற்குப் பொதுமுகமான எத்தனமும் தேவைப்படுகின்றது என்றார்.

### இரு கருத்துக்கள்

நாங்கள் இருகருத்துக்களுள்ள உலகில் ஒருமித்து வாழ்கிறோம். ஒருகருத்து தேவனுடைய சித்தத்திற்கு அமைய வாழ்வது; மற்றயது தேவசித்தத்திற்கு நேர் விரோதமாக மனிதனுடைய தொழில் நுட்பத்தையும் விவேகத்தையும் தழுவிவாழ்வது.

சத்தியவேத பாதுகாவலன்
வருட சந்தா:

| இலங்கை: | வெளிநாடுகள்: |
|---|---|
| ரூபா 6-00 | 6-50 |

தனிப்பிரதி சதம் 12
(தபாற்செலவு உட்பட)

விநியோகிஸ்தர்களுக்குக் கழிவு

| | | |
|---|---|---|
| 50-உம் 50-க்குமேல் | 30% | தபாற் செலவு பிரத்தியேகம் |
| 25-உம் 50-க்குள் | 25% | |
| 10-உம் 25-க்குள் | 20% | |
| 5-க்கு மேல் | 10% | |

# ஆசா. யோசேவாஸ் முனிந்திரரின்

## 250-வது மறைவுதின ஞாபகார்த்தம்

### கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர் அவர்கள் விடுத்த செய்தி

"எம்மை வந்து சூழ்ந்திருக்கும் இக்கட்டான நிலைமையில் எமக்கு ஒரு காலங்கண்ட பாரம்பரியம் உண்டெனும் எண்ணெம் அதிக ஆறுதலுக்கும்" உறுதிக்கும் ஊற்றாகின்றது. எமது கத்தோலிக்க சரித்திரத்தில் வானளாவிய கோபுரம் போல் இருக்கிறார் சம்மனசுச்சுவாமிகள் எனும் ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் சுவாமிகளாவர். இவருடைய மறைவின் 250-வது ஆண்டு தினம் இம்மாதம் 16-ந்திகதி வருகின்றது.

"இக்காலத்தைவிட அதிககஷ்டம் நிறைந்ததும், மனிதஆதரவு மிகமிகக்குறைந்ததுமான காலத்தில் அவர் நிலைநாட்டியவை, எமக்கு ஒரு அறைகூவலாகி தற்போதைய நிலைமையில் தாழ்மை நிறைந்தவேண்டுதலில் நம்பிக்கை வைப்பதால்வரும் விசுவாசம், வீரம், ஞானம், விடாமுயற்சி ஆதியன கொண்டு செயலாற்றும்படி தூண்டுகின்றன. பயங்கரத்துக்குரிய தடைகளைத்தாண்ட யோசேவாஸ் சுவாமிகளுக்கு வழிதிறந்தது பரிசுத்த செபமாலை—அதாவது மாதாவிடம் சரண்புகுதல்—ஆகும். செபப் பெலன்நிறைந்த அவருடைய முயற்சியின் முதற்பேறாக அவர் கருதியது தாம் சென்றவிடங்களில் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுத்ததையே. சென்ற இடங்களில் கூடியவிரைவில் அவசர அவசரமாக அமைத்தபீடங்களில் விசுவாசிகள் சூழ்ந்திருந்து திருவிருந்தருந்த பூசை ஒப்புக்கொடுத்தார். இதற்காகவே அவர் நாடெங்கும் கால்கடுக்க நடந்தார். கத்தோலிக்க குடும்பம் எங்கிருந்ததோ அங்கு பயணத்தை நிறுத்தி

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இரட்சாபிதா

1711-ம் ஆண்டு தைமாதம் 16-ந் திகதி கண்டிநகரில் பரிசுத்தத்தின் நறுமணங்கமழ, யாவரதும் அன்புக்கு இலக்கான கத்தோலிக்க குருவர் ஒருவர் அமலனடி சேர்ந்தார். அவர் யோசேவாஸ்சுவாமிகளாவர். போர்த்துக்கேய குடியேற்றநாடான கோவையைச் சேர்ந்த கொங்காசாதிப் பிராமண குலத்தைச் சேர்ந்தவர். தியான சம்பிரதாயக் குருக்களுள் ஒருவரும், அச்சபையின் முதற்றலைவருமாயிருந்தார்; இலங்கையில் வேதம்போதிக்க மனமுவந்து இங்குவந்தார்; கண்டியரசனின் பிரசையாகி அவ்விராச்சியத்தைத் தம்பக்கமாக்கிக் கொண்டார்.

அவருடைய மரணவேளையைப்பற்றிக் கண்கண்ட சாட்சியம் உளது. "1711-ம்ஆண்டு தை 16-ம்நாள் பாவசங்கீர்த்தனஞ்செய்ய ஆயத்தப்படுத்தும்பொழுது தாம் அதை மரணத்துக்கு ஆயத்தமாகச் செய்யப் போவதாகக்கூறினர். ஆனால், **யாக்கோமே கொன்சால்வெஸ்** சுவாமியார் அதை அதிகம்பொருட்படுத்தினரில்லை. அவர் முன்னும் அப்படிக்கூறியிருந்தபடியால், அவஸ்தைபூசுதலுக்குத் தைலமும் ஆயத்தமாய் வைத்திருக்கும்படி கூறினர். பிற்பகல் ஐந்து மணிக்கு, **இஞ்ஞாசியோ த அல்மேய்தா** சுவாமியார் தூர மீசாம் ஒன்றிலிருந்து திரும்பி வந்திருந்தனே, வாஸ்சுவாமியார் அவருடனும், யாக்கோமே கொன்சால்வெஸ் சுவாமியாருடனும் கோவிலுக்குச் சென்று மீசாமுக்குச் சென்ற குருவானவர் திரும்பும்போது செய்வதுபோல, தெதேயுமடித்துத் தேவனுக்கு நன்றிசெலுத்தினர். பின்பு மூன்றுங் கணிதச் செபஞ் சொல்லிச் சபைச் செபங்களிலும் பங்குபற்றினதுமாத்திரமல்ல, அன்று வெள்ளிக்கிழமையாயிருந்தபடியால் கசைகளால் தம்மை அடித்தும் கொண்டார். பின், குருமாரை அழைத்துத் தமக்கு அவஸ்தைபூசுதல் தரும்படி கேட்டுப் பக்தியருட்சியுடன் அதைப்பெற்றார். பெற்றபின் இருமுறை பாவசங்கீர்த்தனஞ்செய்து முடித்து, தமது ஆசனம் அமர்ந்தபின் ஆண்மா பிரியுமெனக் கூடநின்றவர்களுக்குக் கூறினர்.

அந்நேரமெல்லாம் அதிக பக்தி நிறைந்து ஆண்டவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். தம்மைத் தரையில் வளர்த்தும்படி குருமாரைக்கேட்டார்; குருமாரோ இணங்கவில்லை. தாம் என்றும் மனதிலிருத்தி வைக்கக் கூடிய புத்திபோதகவு கூறும்படி யாக்கோமே கொன்சால்வெஸ் சுவாமியார் கேட்டபொழுது, **"எவனாவது வாழ்க்கையில் செய்யாததொன்றை மரணவேளையில்செய்யமாட்டான்"** எனக் கூறினர்.

சற்றுநேரத்துக்குப்பின், எரிகிற மெழுகுவர்த்தியொன்றைப் பெற்று, விசுவாச, நம்பிக்கை, சிநேகமுயற்சி செய்து, கையில் சிலுவையைப்பிடித்துக்கொண்டு அவஸ்தைப்பிரார்த்தனை சொல்லும்படி குருமாரைக்கேட்டார். அதுமுடிந்ததும், எல்லோரையும் மௌனமாயிருக்கும்படி கேட்டு, ஆண்டவருடன் தியானத்தில் ஆழ்ந்தார். படிப்படியாக அறிவற்றுப்போக, தமது அறுபத்தோராவது வயதில் இறைவனிடம் தமது ஆன்மாவை ஒப்படைத்தார்.

அடுத்தநாள் இச்சோகசெய்தி பரவியதும், அநேகமக்கள் பலஇடங்களிலுமிருந்து கண்டி ஆலயத்துக்கு வந்தனர். அவர்பால் கொண்டிருந்த மாவணக்கத்தினிமித்தம் மிகத்தூரமான இடங்களிலிருந்தும் மக்கள் வந்தனர். மக்கள் அவர்பாற்கொண்ட பேரன்பையும், பட்சத்தையும் திருப்திசெய்யும் நோக்கமாக மரித்தபின் அவருடைய சடலம் வைத்திருந்த பேழையை மூன்று நாட்களாக அடக்கஞ்செய்யாமல் வைக்கவேண்டியிருந்தது. முடிவில் மிக ஆடம்பரத்துடன் அடக்கஞ்செய்யப்பட்டது. எல்லோரும் துக்கம் மிகுந்திருந்தார்கள்; பூலோகத்தில் ஒரு பிதாவையும், ஆயனையும் இழந்தபோதிலும் பரலோகத்தில் தமக்கோர் பாதுகாவலர் உண்டென ஆறுதலடைந்தனர்." (Oratorian Mission P. 122).

வண. **செபஸ்தியன் டோஜெகோ** எழுதியபடி யோசேவாஸ் முனீந்திரர் இறந்ததையறிந்த **நரேந்திரசிங்க** அரசன் தனது மாளிகையிற் சேவைசெய்த கத்தோலிக்கர் யாவரும் சுவாமியாருடைய ஈமச்சடங்குகளுக்குச் சமூகங்கொடுக்கும்படி உத்தரவிட்டதுமன்றி, மற்றும் குருமாருக்கும் எவ்விதத்திலும் உதவிபுரியும்படியும் பணித்தான். வண. கொன்சால்வெஸ் சுவாமியார் ஈமப்பிரசங்கம்செய்தாரெனவும், முனீந்திரருடைய சடலம் கண்டி, மனந்திரும்புதல் மாதா கோவிலில் அடக்கஞ்செய்யப்பெற்றதெனவும் அதேசரித்திரம் கூறுகிறது.

வாஸ்சுவாமியாருடைய சடலம் இரகசியமாய்க் கோவைக்கு எடுத்துச் செல்லப்பெற்றதெனச் சில ஆண்டுகளின்பின்னர் ஒருவதந்தி உலாவியது. அது நரேந்திரசிங்கனுக்கு எட்டியபொழுது, கோபித்து, உண்மையை அறிந்துவரும்படி தனது ஊழியரை அனுப்பினன். வதந்தி பொய்யெனக் கொன்சால்வெஸ் சுவாமியார் உறுதி கூறியனுப்பினர். அரசனோ திருப்தி கொள்ளாமல் தனது அதிகாரிகள் முன்னிலையில் சமாதியைத் திறப்பித்தான். சவப்பேழையின் கீழ்ப்பாகத்தைத் திறந்தபொழுது கால்கள் காணப்பட்டன. அழியாதிருந்த சப்பாத்து ஒன்றை வெளியே எடுத்தபொழுது அதற்குள் பாத எலும்புகளிருக்கக் கண்டனர்.

## சுவாமிகளின் வரவு

ஒல்லாந்தர் கத்தோலிக்க குருமாருக்கும், மக்களுக்கும் விரோதமாய்ச் சட்டம்இயற்றி, கத்தோலிக்க ஆராதனையைத் தடை செய்தபோதுதான் வாஸ் சுவாமிகள் 1687இல் இலங்கைக்கு வந்தார். 1658-ம்ஆண்டு புரட்டாசி 19-ம்நாள் டச்சுக்காரர் விடுத்த பிரகடனமே அவர்களுடைய சட்டங்களில் மிகக்கொடுமையானதெனலாம். ரோமன் கத்தோலிக்க குருவை மறைத்து வைத்திருப்பவர், அல்லது அவருடைய மறைவிடத்தை வெளிப்படுத்தாதவர் மரண தண்டனைக்குரிய குற்றவாளி எனக்கருதப்பட்டார். இச்சட்டம் எப்போதாவது நிறைவேற்றப்பட்டதற்குச் சான்றுகள் இல்லை. எனினும், ஆயனின்றித் தவித்த இலங்கைக் கத்தோலிக்கமக்களுக்கு ஞானப்பணிபுரிய வாஸ் சுவாமிகள் இலங்கைக்கு வந்தபோது அது சட்டமாகவிருந்தது. அவர் பிச்சைக்காரன் வேஷத்தில் திரிந்தார். பகல்வேளை ஒளித்திருந்தும், விரோதிகளுக்குத் தென்படாமல் சிறு கூட்டங்களாய்க் கூடியிருந்த கத்தோலிக்கரை இரவில் சென்று தரிசித்தும் வந்தார்.

அவருடைய அயரா ஊழியத்தின் பயனாக அவர் யாழ்ப்பாணம் வந்து இரண்டு ஆண்டுகளுள் கத்தோலிக்கர் தொகை பெருகியதினால் டச்சு ஆட்சியாளர் எவ்வளவு பெருங்கவலைக்குள்ளாகினர் எனில், வான்மைடிறற் தேசாதிபதி "எல்லா ரோமன் கத்தோலிக்க கோவில்களையும், இரகசிய மடங்களையும் இடித்துத் தகர்க்கும்படி" கட்டளை விடுத்தான்.

## பரிசுத்த வாழ்க்கை

வாஸ் சுவாமியாரின் பரிசுத்த சீவியத்தைப்பற்றி வண. அந்திரே பெரேய்ரா சே. ச. சுவாமியார் பின்வருமாறு இந்திய கவர்னர் டொம் மிகுவெல் த அல்மெயிதாவுக்கு 1690இல் குறிப்பிட்டதாவது: "பல வருடங்களின் முன் மாறுவேஷத்தில் இங்கு வந்து இந்த இராச்சியத்தில் பலஇடங்களுக்கும் சென்று யாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தொலிக்க ஆர்வத்தோடும், வெகு பிரயாசையோடும் தேவதொண்டு புரியும் வண. வாஸ்சுவாமிகள் சுத்தவாளரென யாவராலும் மதிக்கப்படுகிறார்."

கொரோமாண்டல் கரையிலுள்ள திருச்சபையின் வரலாற்றை எழுதும் யோவான்னி அப்பியான்னி சுவாமிகள், வாஸ்சுவாமிகளின பரிசுத்தத்தைப்பற்றிக் குறிப்பிடுவதாவது: "அவர்களுடைய (டச்சுக்காரர்) கடைகள் இருந்தபோதிலும், கோவையில் இருந்துவந்த ஒருகன்னடக் குருவானவர் கடந்த 10,12 ஆண்டுகளாகத் தீவின் (இலங்கை) உட்பகுதிகளுக்குச் சென்று பலரை நமது வேதத்திற்குத் திருப்ப வழிகண்டிருக்கிறார். அன்றியும், டச்சுக்காரரின் உயர்உத்தியோகத்தர் சிலர், சுவாமியார் பரிசுத்தராகவே அங்கு வாழ்ந்துவருகிறார் என்றும், ஒருமுறை பஞ்சம் நடந்தபோது அங்குள்ள மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யப் போதுமான நெல்வருஷிக்கச் செய்தார் என்று வதந்தி உலாவுவதாகவும் கூறுகின்றனர்.

"யோசேவாஸ் எனும் இந்த நல்ல குருவானவரைப்பற்றி மிகவும் நம்பிக்கைக்குரியவர்கள் எனக்குக் கோவையில் கூறியபடி அவர் அத்தீவுக்குச் செல்லுமுன் அதிகசெபத்திலும், தவக்கிருத்தியத்திலும் ஒதுங்கிச் சீவித்தாரெனவும் இப்பொழுது மதுரை மிஷனரிமார்போன்று வாழ்க்கை நடத்துபவர்களும், தமக்கு அறிமுகமானவர்களுமான நான்கு குருமாரை அழைத்துக்கொண்டாரெனவும், காளமான

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## இலங்கைமணித் தாரகையே! வாழ்க!

"ஜெயம்"

நீர்வளமும் நிலவளமுங் கரங்கள் கோத்து
நிருத்தமிடு மெழில்தவழுங் கோவைத் தேசப்
பேர்விளங்க வந்ததிருப் பெட்பின் செல்வா!
பெற்றோர்கள் செய்ததவப் பயனே என்றும்!
ஈரம், அருள், தாழ்மை, பொறை, இன்சொல், ஞானம்,
ஈடரிய கனனிசுத்த நெறிகள் காத்தோய்!
ஆரமுதே! யோசேவ்வாஸ் முனியே! நின் வாழ்(வு)
அருமறையின் சரித்திரத்தின் புனிதஏடாம்.

●

சிறுப்பத்தி லருள்பெற்றாய்; பக்தி வேகச்
செந்தீயில் வெந்துற்றாய்; உலக வாழ்வை
வெறுத்திட்டாய்; ஏழ்மையினில் வெற்றிகண்டாய்;
வேதத்தின் உறுதியிலே வீரங்கொண்டாய்;
ஒறுத்தலொடு கடுந்தவத்தி லுடலங் காய்ந்தாய்;
உலகுக்குச் செத்திட்டாய்; வானந்தன்னைச்
சிறப்பிக்குந் தாரகைகள் போலும் ஞானச்
செல்வர்களைச் செனிப்பித்தாய்! நின்சீர் வாழ்க!

●

தன்னுயிரை மன்னுயிர்க்காய்த் தத்தம் செய்த
தரித்திரத்தின் தந்தையெனும் பேருங் கொண்டாய்;
பொன்னுலக வாழ்வினுக்கே மக்கள் தம்மைப்
புடம்வைத்தாய்; போதித்தாய்; சிறையில் நொந்தாய்;
கன்னடம்பொன் மலையாளம் கோவை யன்றிக்
கவினெழுமீ ழமணித் திருநா டெங்கு(ம்)
இன்னலிடை புனிதமறைச் சேவை செய்தாய்;
இலங்கைமணித் தாரகையே! நின்பேர் வாழ்க!

●

ஆலயங்கள் அமைத்திட்டாய்; சமயக் கல்வி
அறிவொளிரக் கலைக்கூட மாக்கித் தந்தாய்;
சாலைகளில் நோயாளர் தம்மைப் பேணிச்
சலியாத பணிசெய்தாய்; தானஞ் செய்தாய்;
மாலையிருள் கவியாது மாமறைக் கோர்
மங்காத மாணிக்கச் சுடராய் நின்றாய்;
ஆலையினிற் கரும்பாகி யபய மீந்தாய்;
அற்புதப்பொற் சம்மனசே! அன்பே! வாழ்க!

●

தாயிடத்துச் சாகாத கருணை கண்டோம்
தண்ணிலவின் பொன்னொளியிற் குளிர்மை கண்டோம்
காயிடத்துக் கனிகின்ற தகைமை கண்டோம்
கார்முகிலிற் பயிர்காக்குங் கடமை கண்டோம்
சேயிடத்திற் றூயமனச் செல்வங் கண்டோம்
செங்கதிரி லிருள்சீய்க்குஞ் சீர்மை கண்டோம்
யாவுமொருங் கேதிரண்டு வந்து பூத்தாய்;
ஞானவர மாமுனியே! வாழ்க! வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### யாழ்ப்பாணப் புதியமேயர்

யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயராகத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவரும், பத்தாம்வட்டார அங்கத்தினருமான திரு. ரி. எஸ். துரைராசா சென்ற 7-ந் திகதி சனிக்கிழமை காலை தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றார். மாநகரசபைக் கமிஷனர் திரு. ஏ. வி. சின்னையா அவர்கள் தேர்தலுக்குத் தலைமைவகித்தார். கலரியில் யாருமே அனுமதிக்கப்படவில்லை. பத்திரிகை நிருபர்கள் அனுமதிச் சீட்டுகள்மூலம் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள். பெருந்திரளான மக்கள் வெளியே கூடியிருந்தார்கள். பொலிஸ் பந்தோபஸ்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேர்தலிலே மேயர் பதவிக்குத் திரு. துரைராசாவின் பெயரை டக்றர் தர்மலிங்கம் பிரேரிக்க, காதர் சுல்தான் அனுவதித்தார். ஹாஜி அபுசாலியின் பெயரைத் திரு. கே. எஸ். நடராஜா பிரேரிக்க, திரு. இராசசூரியர் அனுவதித்தார் திரு. துரைராசாவை ஆதரித்துத் திருவாளர்கள் ஜோண், அழகையா, டக்றர் தர்மலிங்கம் ஏ. நடராசா, துரைராசா, சுல்தான், செல்லத்துரை, சோமசுந்தரம் ஆகிய எண்மரும் வாக்களித்தனர். ஹாஜி அபுசாலியை ஆதரித்துத் திருவாளர்கள் கே. எஸ். நடராசா, அபுசாலி, இராசசூரியர், ஜேக்கப் ஆகிய நால்வரும் வாக்களித்தனர். ஒருவர் வாக்களிக்க மறுத்துவிட்டார். சமசமாச கட்சியைச்சேர்ந்த துரைராசசிங்கமும், திரு. தேவபாலசுந்தரமும் தேர்தலைப் பகிஷ்கரித்தனர். அதனால் திரு. துரைராசா நான்குமேலதிக வாக்குகளால் புதியமேயராகவும், சிறுபான்மைத்தமிழரும், தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவருமான திரு. என். பி. செல்லத்துரை ஏகமனதாய் உதவிமேயராகவும் தெரிவுசெய்யப் பெற்றார்கள்.

### யோசேவாஸ்முனிவரின் 250-ம் ஆண்டு நிறைவுவிழா

ஈழத்தின் அப்போஸ்தலர் என்று இணையில்லாப் புகழ்படைத்தவரும், ஈழவள நாட்டிலே கிறீஸ்துநாதரின் கொடி பட்டொளிர்வீசிப் பறந்திட அருந்தியாகஞ்செய்தவருமாகிய ஆசா. யோசேவாஸ்முனிவர் பரமபதஞ்சேர்ந்த 250-ம்ஆண்டு நிறைவுவிழா நிகழும் 16-1-61 திங்கட்கிழமை மாலை 6மணியளவில் ஆர்ச். அடைக்கலநாயகி ஆலயக்குரவர் வண. என்.யோசெவ்சுவாமியவர்கள் தலைமையில் பாடசாலைமண்டபத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும். சமூகமளிக்குமாறு அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

### நிகழும் ஆண்டில் உலகின் குடிசனம்

நிகழும் 1961-ம்ஆண்டிலே உலகின் குடிசனத்தொகை 300 கோடியைத் தாண்டிவிடுமென்றும், 1975-ம் ஆண்டிலே இத்தொகை 383 கோடியைத் தாவிப்பிடித்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறதென்றும் பிரித்தானிய வைத்தியசஞ்சிகை தனது கட்டுரையொன்றில் தெரிவித்திருக்கிறது. 1958-ம ஆண்டிலே உலகின் சனத்தொகை 285கோடியே 40இலட்சமென மதிப்பிடப்படலாயிற்று. வருடந்தோறும் இத்தொகை சராசரியாக 1·7 விகிதம் அதிகரிக்கின்றது; தற்போதைய பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 35 அதாவது ஒவ்வொருவருடமும் சுமார் 10 கோடி போல் அதிகரிக்கின்றது; மதிப்பிடப்பட்டுள்ள இறப்புவிகிதம் ஆயிரத்துக்கு 18. அதனால் 5கோடியே 10இலட்சம் பேர் இறந்துபோக, 4 கோடியே 80 இலட்சம் பேர் மீந்திருக்கிறார்களென்றும் அச்சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

### ஈரவெங்காய விலைக்கட்டுப்பாடு

அடுத்தவாரமுதல் ஈரவெங்காயத்தின்விலை கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. அதன்விலை இனிமேல் றாத்தல் ஒன்று 28சதமாயிருக்கும். இப்பொழுது மாக்கெற்விலை 36சதம். வியாபாரிகள் ஈரவெங்காயத்தில் கொள்ளை இலாபம் அடிக்கிறார்களென்று உணவுக்கமிஷனர் தெரிவித்து, அடுத்தவாரம் புதன்கிழமைமுதல் இந்தக்கட்டுப்பாட்டுவிலை நடைமுறைக்கு வரக்கூடுமெனக் கூறியிருக்கின்றார்.

### டக்றர் வில்லியம் ஜேம்ஸன்

மானிப்பாயிலுள்ள கிறீன் ஞாபக ஆஸ்பத்திரியிலே பலவருடகாலம் பெரும் பிரஸ்தாபமாக வைத்திய தொண்டாற்றிப் பல்லோரதும் பாராட்டுதலைப் பெற்றிருந்து, தற்போது அமெரிக்காவிலே வைத்தியசேவையில் ஈடுபட்டிருப்பவரான டக்றர் வில்லியம் ஜேம்ஸன் அவர்களும், அவரது இளைய புதல்வர் டக்றர் ஜெறூண்டஸ் ஜேம்ஸன் அவர்களும் வருகிற மாசிமாதம் 2-ந் திகதியன்று கொழும்பு வந்துசேர்ந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யவிருக்கிறார்களென அறிகின்றோம்.

### இளைப்பாறும் ஸ்தானிகர்கள்

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைத் தூதுவராக இருந்துவரும் சேர் குளோட் கொறியா, இந்தியாவிலுள்ள இலங்கைக் ஹைகமிஷனர் சேர் றிச்சேட் அலுவிகாரை, மலாயாவிலுள்ள இலங்கைக் ஹைகமிஷனர் திரு. டி. சி. ஆர். குணவர்த்தன ஆகிய மூவரும் தங்கள் பதவிகளின்காலம் முடிவடைந்ததும் மீண்டும் அப்பதவிகளைப் பெறத் தாங்கள் விரும்பவில்லையென்று அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டுத் தூதுவ சேவையிலே விதிக்கப்பட்டுள்ள புதிய நிபந்தனைகளைத் தொடர்ந்தே இம்மூவரும் தங்கள் பதவிகாலத்தை நீடித்துக்கொள்ள விரும்பவில்லையெனத் தெரிவித்திருக்கிறார்கள்.

### ஆயுர்வேத வைத்தியசாலைகள்

ஆயுர்வேத மருந்துச்சாலைகளையும், நவின்ன எனுமிடத்தில் ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் அமைப்பதற்கும், ஏற்கனவே இருந்துவருகின்ற ஆயுர்வேத வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குமாக ஆஸ்பத்திரிச் சுவீப்நிதியிலிருந்துஎடுத்து ஒருகோடி ரூபாவரை செலவிடுவதை மந்திரிசபை அங்கீகரித்திருக்கின்றது. ஒவ்வோர் பட்டினத்திலும், கிராமத்திலும் ஆயுர்வேத மருந்துச்சாலைகளை அமைப்பதற்குத் தற்போது திட்டமிடப்பட்டிருக்கிறது. அத்துடன் கொழும்புநகருக்கு வெளியே இருந்துவரும் ஆயுர்வேத வைத்தியசாலைகளிலுள்ள சாதனங்கள் அபிவிர்த்தி செய்யப்படவிருக்கின்றன. காலி, கண்டி, குருநாகல், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளையாகிய இடங்களிலுள்ள மாகாண வைத்தியசாலைகள் உதவிபெறவிருப்பனவற்றில் சிலவாகும். இவற்றிலே பெரும் திருத்தங்கள் செய்யப்பெற்றுச் சத்திரவைத்தியசாலைகளுக்குச் சிறந்த உபகரணங்களும் வழங்கப்படும்.

### சினிமாக்களில் புதிய விலக்கு

கொழும்பு மாநகரசபையின் சட்ட சுகாதார கமிற்றியானது அந்நகரிலுள்ள சினிமாமாளிகைகளில் புகையிலை, சிகறெற்புகைப்பதைத் தடைசெய்வதென முடிவுசெய்திருக்கிறது. இதற்கான சட்டஉபவிதிகள் தயாரிக்கப்பட இருக்கின்றன. பொதுமக்கள் மாநகரசபைக்குச் செய்துகொண்ட விண்ணப்பத்தின்பேரிலேயே இவ்விதம் முடிவு செய்யப்படலாயிற்று. புகைப்பதைக் கட்டாயம் தடைசெய்ய வேண்டுமென்று பிடிவாதமாக நின்றவர்களில் பெண்களும் அடங்குவார்கள்.

---

பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாய் இனிமேல் அரசாங்கம் கையாடவிருக்கும் நடபடிக்கையையிட்டு விழிப்பாயிருக்கும்படி யாவரையும் எச்சரிக்கின்றோம். ஏனெனில், யோசனையில்லா அவசர நடவடிக்கை அரசாங்கத்திற்கும், நாட்டிற்கும் இன்னும் புதியபுதிய வில்லங்கமான பிரச்சனைகளை உண்டுபடுத்துவதாயிருக்கும். பள்ளிக்கூட முகாமைக்காரர் சட்டமுறைகளைக்கையாடி, தங்கள் பள்ளிக்கூட நிலங்களுள் யாராவது உத்தரவின்றிப் பிரவேசிக்கக்கூடாதென்ற பாதுகாப்பைப் பெற்றதினால், மந்திரிசபை அதிகம் கலக்கத்திற்கு உள்ளாகி விட்டதென்று தெளிவாகிறது. **முகாமைக்காரர் இப்பாதுகாப்பைப் பெற்றதில் என்ன பிழையுண்டு?** மந்திரிசபையின் அறிக்கை கூறுவது யாதெனில்: "முகாமைக்காரர் பெற்றுக்கொண்ட உத்தரவு பெற்றோரையும், பிள்ளைகளையும், ஆசிரியரையும் பாதிக்கிறதுபோலத் தோன்றுவதால், அரசாங்கம் கல்விச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அத்தால் தடைபடுத்தப் படுகிறார்களே" என்பதாம். ஆனால் இது மிகத்தப்பிதமான ஓர் அபிப்பிராயம். அரசாங்கமே முறையின்படி நீதிமன்றத்தின் ஆதரவைத் தேடி, முகாமைக்காரருக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பின் விளக்கத்தைப் பெற்றுக்கொண்டது. ஆசிரியரும், பெற்றோரும், பிள்ளைகளும் மாத்திரமல்ல, வித்தியாஉத்தியோகஸ்தர்களும் அத்தால் பாதிக்கப்படவில்லையென்று அறிந்துள்ளது.

இப்புதிய விளக்கத்தால் பாடசாலைகளின் முகாமைக்காரர் அதிருப்திப்படுவோராயின், நீதிமன்றத்தில் இன்னும் சென்று மனுப்பண்ணட்டும். அரசாங்கமும் அப்படியே செய்துகொள்ளட்டும். பாடசாலைகளோடு சம்பந்தப்பட்டுள்ள யாவற்றையுமிட்டு நீதிமன்றங்களில் தீர்வைபெறுவதே உத்தமம். அத்தால் யாதொருவரும் முறையிடுவதற்கு இடமிருக்கமாட்டாது ஆனால், அரசாங்கமோ கோபங்கொண்டு தற்போது செய்யநினைப்பதுபோல், இன்னும் அநேக அநியாயசட்டங்களை உண்டுபண்ணாமல் இருக்கவேண்டும். பாராளுமன்றத்தைக்கூட்டி, பள்ளிக்கூடங்களையும், நிலங்களையும் யாதொரு நஷ்டபரிகாரமுமின்றி, தனக்காக்குவதற்குச் சட்டத்தைக்கொண்டுவர மந்திரிசபை தற்போது எண்ணுகின்றது. அத்தோடு நின்றுவிடாமல் சட்ட ஆதரவின்கீழ் தனித்து இயங்குவதற்கென விடப்பட்ட பள்ளிகளையும் பறித்துப்போடுவதாகப் பயமுறுத்துகிறது. இச்செயல் ஜனநாயகமுறையில் இயங்கும் எவ்வித அரசாங்கத்துக்குமே முற்றும் தகாத செயலாயிருப்பதுமன்றி, சீரற்ற, நேரற்ற, அடிப்படைக் கோட்பாடு யாதுமேயற்ற செயலாயுமிருக்கும்,

இலங்கை முழுவதிலுமுள்ள கத்தோலிக்க பாடசாலைகள் தங்கள்எல்லைகளுக்குள் அனுமதியற்றஎவருமே உட்செல்லவிடாமல் தடுப்பதற்குரிய பாதுகாப்பைக் கடந்தசிலநாட்களாய், நீதிமன்றத்தின்மூலம் பெற்றுக்கொண்டதின் நியாயத்தை எமது அரசாங்கத்தோர் உண்மையாகவே அறிவார்கள். குழப்பவெறிகொண்ட காடையர்கூட்டங்கள்சில பலாத்காரமாய்த் தங்களது பள்ளிநிலங்களுள்புகுந்து கட்டடங்களைத் தமதாக்கிக்கொள்ளக் கூடுமென்று முகாமைக்காரர் பயந்தார்கள் என்பது தெளிவு. காடையர்களின் தொந்தரவுவேளையில் தங்களுக்கு யாதோர் உதவிசெய்வதற்கும் அரசாங்கத்தார் தயாராயிருக்கமாட்டார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிந்தவிஷயம். இதிலும்பார்க்க, பொலிசார் அல்லது இராணுவத்தார் அவ்வேளையில் செய்யக்கூடியது என்னவோஎன்று அவர்கள் ஐமிச்சப்படுவதற்கும் இடமிருந்தது. அன்னோரின் உதவியைத் தேடும்வேளையில் உதவிக்குப்பதிலாய், பலாத்காரம்செய்து பள்ளிகளைப் பொலிசாரும், இராணவத்தாரும் தாங்களே அரசாங்கத்தின்சார்பாய் முற்றுகையிடக் கூடுமென்றும் பயந்தார்கள்.

# விழிமின் இந்நேரம்!

வெள்ளம்வருமுன் அணைகட்டுவோமென்றே முகாமைக்காரர் நீதிமன்றத்தின் பாதுகாப்பைத் தேடினர்.

இவ்வண்ணம் அவர்கள் செய்யுமட்டும் விட்டுக்கொண்டிருந்த அரசாங்கத்தார்க்கு இது ஒருபெருமையல்ல. அரசாங்கத்தார் உயிர்களுக்கும், பொருள்களுக்கும் பாதுகாப்பாயிருக்க வேண்டியவர்கள். சிலநாட்களின்முன் அரசாங்கத்தார் உத்தியோகமுறையில் விடுத்த செய்தியொன்றிலும் பெரிய **தோர்பிழையை விட்டுவிட்டனர்.** சமயபாடசாலைகளைத் தாமெடுப்பதையிட்டு **எதிர்ப்புக் காட்டிநிற்கும் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது தமது பொறுப்பல்ல என்ற இவ்வார்த்தைகள் மிகத்தப்பிதமானவை.** பெற்றாரைப் பயமுறுத்திப் பிள்ளைகளை உள்ளிருக்கச் செய்வோமென எண்ணி

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

---



## ஐந்தாவது ஆண்டு மரண ஞாபகம்

**பிறப்பு: 28-4-1930** **இறப்பு: 19-1-1956**

எங்கள் அருமைச் சிரேஷ்ட புத்திரி செல்வி லோறஞ்சியாப்பிள்ளை கமலம் இவ்வுலக வாழ்வைநீத்த ஐந்தாவது ஆண்டு நிகழும் 19-1-61-இல் பூர்த்தியாகின்றமையால் இதனைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். கன்னியர்களும், உறவினர் சிநேகிதர்களும் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுமாறு விநயமாக வேண்டுகின்றோம். அன்றையதினம் காலை 5-30மணிக்கு இவவின் ஆன்மசாந்திக்காகச் சுண்டிக்குளி சஞ் சுவாம்கோவிலிலே நிறைவேறும் துக்கப் பூசைக்குச் சமுகமளிக்குமாறு இனசனரையும், அன்பர்களையும் வேண்டுகின்றோம்.

பெற்றோர்:
தி. க. அமிர்தநாதர்
பொன்ரேஸ் அமிர்தநாதர்
சகோதரர்கள்:
மேரியோசேப்பின் யேசுதாசன்
றீற்ரு அமிர்தநாதர்
திரேசா அமிர்தநாதர்
அன்ரனி குணசேகரம் அமிர்தநாதர்
சேவியர் ஜெயசேகரம் அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### தைமாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | ஞா | 2 | பிரத். பின் 2-ம் ஞாயிறு (வி. ம) | [ப] |
| 16 | தி | 3 | அர்ச். மார்சலஸ் | [சி] |
| 17 | செ | 3 | அர்ச்' வனத்து அந்தோனியார் | [வெ] |
| 18 | பு | ம | காலதினம் — (ஞாயிறுபூசை: அர்ச். பிறிஸ்கா ஞா.) | [ப] |
| 19 | வி | ம | காலதினம் — (ஞாயிறு பூசை: அர்ச். மாறியுஸ், மார்த்தா தோழர் ஞா. அர்ச். கனியூட் ஞா) | [ப] |
| 20 | வெ | 3 | அர்ச். பபியாரும், செபஸ்தியாரும் | [ப] |
| 21 | ச | | அத்ச். அக்னேஸ் அம்மாள் | [சி] |

சத்திய வேத
பாதுகாவலன்
1961-ம் ஆண்டு
தைமாதம் 12-ந் திகதி

## ஆசா. யோசேவாஸ் முனிவர்

எவரையுமே தமது அன்பாலும், அமிர்தமொழியாலும் ஈர்ந்துவந்தவரும், ஆடம்பரமே இன்னதென்றறியாது ஒருபரதேசியைப்போன்று ஊரூராசச் சுற்றித்திரிந்து வேதபோதக தொண்டாற்றிப் பெரும்வெற்றி கண்டவருமான யோசேவாஸ் எனும் திருநாமம்பூண்ட கத்தோலிக்க குருப்பிரசாதிஒருவர் 1711-ம்ஆண்டு தைமாதம் 16-ந் திகதியன்று கண்டியிலே பரிசுத்ததனம் பரிமளிக்க மரணத்திரையில் மறைந்தார். இவர் மரணமடைந்தசெய்தியை அறியவந்ததும் நரேந்திரசிங்களன்ற கண்டிமன்னன் அரசமாளிகைச் சேவையில் அமர்ந்திருந்த கத்தோலிக்கர்அனைவரும் அவரின் புனிதவுடல் அடக்கத்துக்குச் சமுகமளிக்க வேண்டுமென்றும், அவரது உடன்குருப்பிரசாதிகளுக்குச் சகலவழியிலும் உதவி செய்யவேண்டுமென்றும் ஆஞ்ஞாபித்தான். மறுதினம் அவரின்மரணசெய்தி ஆங்காங்கு பரந்ததும் சகலபகுதிகளிலுமிருந்து — அதிகம்தூரமான இடங்களிலுமிருந்துதானும் திரளான மக்கள் கண்டிநகரகோவிலிலே ஒன்றுகூடினார்கள். ஏனெனில், அவர்களெல்லாம் அவரைவெகுவாக நேசித்துச்சசங்கித்து வந்தார்கள். அவர்களைத் திருப்திசெய்யுமாறு மூன்றுதினங்களாக அடக்கம் நிறுத்தப்பட்டிருந்து, இறுதியாக அங்குள்ள அவிசுவாசிகளை மனந்திருப்பும் மாதாகோவிலிலே பெரும் ஆடம்பரங்களுடன் அடக்கவைபவம் நடந்தேறியது.

யோசேவாஸ் குருமுனிவரின் மரணத்தாலே மக்கள் பெரிதும் ஆகுலமடைந்தார்கள். பிரலாபித்தார்கள். ஏனெனில், அவரின்செபத்தாலும், தபத்தாலும், தானதருமத்தாலும், அற்புத செயல்களாலும், அருந்தொண்டுகளாலும், அனுதாபசிந்தையாலும் அமோகமானநன்மைகளை அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆயினும், பூமியிலே தங்கள் மேய்ப்பரும், பிதாவுமென்று அருமைபெருமை பாராட்டிவந்த ஒருவரைப் பரலோகத்திலே தங்கள்பாதுகாவலராகக் கொண்டிருப்பதாகநினைந்து ஒருவாறு அவர்கள் மனமாறினார்கள்.

எமதுநாட்டில் தமதுஅயராத வேதபோதக தொண்டுகளாலே "இலங்கைஅப்போஸ்தலர்" எனக் கொண்டாடப்படுகின்ற ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் குருமுனிவர் இந்தியாவில்போர்த்துக்கேய குடியேற்றதலமாகிய கோவைநகரில் பிறந்தவர். கொங்கணிய பிராமணகுலத்தைச் சேர்ந்தவர். கோவைத்தியானசம்பிரதாயசபைக் குருமாரில் ஒருவராயிருந்து அதன் முதலாவது சிரேஷ்டராக விளங்கிய இவர் தமதுவிருப்பப்படியே இலங்கையில் தம்மை ஒருமிஷனரியகுருவாக ஆக்கிக்கொண்டார். தமதுசுவிகரிப்பாலும், சஞ்சாரத்தாலும் கண்டிஅரசனின் பிரசையாயினர். இவர் 1687-ம் ஆண்டு இங்குவந்துசேர்ந்தார். அப்போது ஒல்லாந்தர் இடுதண்டம் பிடிதண்டமாக இங்கே ஆட்சிநடத்திவந்தனர். கத்தோலிக்க சமயத்தை அழித்தொழித்துவிடுமாறு பயங்கரவேதகலாபனை நடத்திக்கொண்டிருந்தனர். அன்னார் கத்தோலிக்க குருமாருக்கும், கத்தோலிக்கருக்கும் மாறாகக் கடுமையான சட்டங்களை விதித்திருந்தனர். கத்தோலிக்க சமயவழிபாடுகளைத் தடுத்திருந்தனர். அன்னார் அதுவரை விடுத்தவற்றிலெல்லாம் அதிகம் கடுமையானதென்று கருதக்கூடிய சட்டம்ஒன்றை 1658-ம்ஆண்டு புரட்டாதிமாதம் 19-ந்திகதியன்று பிரகடனஞ்செய்திருந்தனர். அதனால், ரோமான்கத்தோலிக்க குருவானவர்ஒருவருக்குப் புகலிடம் அளிப்பதாகவோ, அன்றேல் பயமுறுத்தி அவர்மேல் குற்றஞ் சுமத்தத் தவறுவதாகத்தானுமோ எவரேனும் கண்டறியப்பட்டால் மரணதண்டனைக்குரிய குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டனர். கிராதரவற்றிருந்த இலங்கைக்கத்தோலிக்கரை விசாரணைசெய்யுமாறு இங்குவந்தபோது இந்தச்சட்டம் அமூலில் இருந்தது. அதனால் இவர் ஒருயாசகனைப்போல மாறுவேடம்பூண்டு பகல்வேளைகளில் மறைந்திருந்தும், இராவேளைகளிலே விரோதிகள்கண்ணுக்குத் தென்படாது தனிப்பட்டவிடங்களில் சிறுசிறுகூட்டமாகக் கத்தோலிக்கரைச் சந்தித்தும், இவ்வாறாகச் சுமார்கால்நூற்றாண்டளவாய் ஏறக்குறைய இலங்கைமுழுவதும் சுற்றித்திரிந்து, வேதவிசுவாசம் திரும்பவும் சுடர்பெற்றொளிரச் [illegible] களிலே விசுவாசச்சுடரை நவமாகஏற்றி ஒளிபெறச்செய்தார்.

இலங்கைத்திருச்சபைமீது கார்மேகம்ஒன்று கவிந்திருந்த அக்காலத்திலே ஆசா. யோசேவாஸ் முனிவர் தெய்வாதீனமாக இங்கு வந்தார். இலங்கைத்திருச்சபையைக் கருமேகம்ஒன்று கௌவிக்கொண்டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே அவர் பரமபதமடைந்த 250-ம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடவிருக்கின்றோம். அன்றுமுனிவர் மரணமடைந்தபோது அப்போதிருந்த கத்தோலிக்கமக்கள் தங்களைநன்கறிந்த— தாங்கள்நேசித்து அருமைபெருமை பாராட்டிவந்தஒருவர் பரலோகத்திலே தங்கள்பாதுகாவலராக இருப்பதையிட்டு மனோதைரியமடைந்தார்கள். இன்று அவர்களின் பிறசந்ததியாராகிய நாமும் அவரதுநாமத்தைச்சொல்லித் தைரியமடைவோம்! அவர் விரைவிலே முத்திப்பேறுபெற்ற பட்டம்பெற்றுப் பலிபீடங்களின் வணக்கத்துக்கு உயர்த்தப்படுமாறு இந்தவேளை மனோற்சாக[illegible] வேண்டுதல்செய்வோம்!

## ஆசா. யோசேவாஸ் முனிந்திரனுக்கு முத். பட்டம் கிடைக்கச் செபம்

எங்கள் கர்த்தாவாகிய கடவுளே! உமது சுத்தவாளரில் உமது மகிமையைச் சிறப்பாய் விளங்கச் செய்பவரே! ஆசியாவில் வேதபோதகத் திருப்பணி செய்யும் குருமாரின் தொகை அதிகரிக்கவேண்டுமென்று ஆசிக்கின்ற தேவரீர், எங்கள் மன்றாட்டைத் தயவாய்க்கேட்டு, யோசேவாஸ் சுவாமிகளைத் திருச்சபையின் பிரசித்த வணக்கத்துக்கு உயர்த்துவதனுல் அவரை ஆசியாவில் சுவிசேஷப் பரப்புதல்தொண்டு புரிவோருக்கு ஓர் உத்தம மாதிரியும், பாதுகாவலருமாய் விளங்கச் செய்தருளும். இந்த மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் திருநாமத்தை முன்னிட்டுக் கேட்டருளும், ஆமென்.

பர. பிரி. திரித்துவதோத்திரம். (3 முறை)

பிரசித்தமாய்ச் செபிக்க அனுமதிக்கப்பெற்றது.
+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

## திருச்சபை ஒற்றுமை அட்டகம்

( தை 18-ந் திகதி—தை 25-ந் திகதிவரை )

### ஒவ்வொருநாளுக்கும் குறிக்கப்பட்ட கருத்துக்கள்

தை 18 **அர்ச். இராயப்பர் பத்திராசனத் திருநாள் :** வெளியேயுள்ள ஆடுகள் அனைத்தும் ஒரே மேய்ப்பனுகிய இராயப்பரின் மந்தையில் வந்துசேரும்படி.

,, 19 கீழைத்தேசப் பிரிவினைச் சபையாரெல்லோரும் அப்போஸ்தொலிக்க ஸ்தானத்துடன் ஒற்றுமைப்படும்படி.

,, 20 புரொட்டஸ்தாந்து மார்க்கத்தார் திருச்சபையின் ஐக்கியத்திற்குத் திரும்பிவரும்படி.

,, 21 இந்துமதச் சகோதரர் மனந்திரும்பும்படி.

,, 22 முஸ்லீம் சகோதரர் மனந்திரும்பும்படி.

,, 23 தவறிப்போன கத்தோலிக்கரெல்லோரும் திரும்பிவந்து தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொள்ளும்படி.

,, 24 யூதர்கள் மனந்திரும்பும்படி.

,, 25 **அர்ச். சின்னப்பர் மனந்திரும்புதல் திருநாள் :** உலகம் முழுவதும் கிறிஸ்து இராசாவின் ஆட்சிக்குட்படும்படி.

### திருச்சபை ஒற்றுமை அட்டகத்தில் சொல்லத்தகும் செபம்

"அவர்கள் எல்லோரும் ஒன்றாய் இருக்கவும், பிதாவே! தேவரீர் என்னை அனுப்பினீர் என்று உலகம் விசுவசிக்கவும், நீர் என்னிலும் நாம் உம்மிலும் இருக்கிறதுபோல அவர்களும் நம்மிடத்தில் ஒன்றாய் இருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்."

**முதல்வர் :** "நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ இராயாய் இருக்கிறாய்"

**துணைவர் :** "இந்த இராயின் மேல் திருச்சபையைக் கட்டுவேன்."

பிராத்திப்போமாக

ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவே! உங்களுக்கு எனது சமாதானத்தை விட்டுப்போகிறேன். எனது சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன் என்று உமது அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றினீரே! எங்கள் பாவங்களைப்பாராதேயும். உமது திருச்சபையின்விசுவாசத்தைப்பாரும். உமது சித்தத்திற்கு ஏற்ற சமாதானத்தையும் ஒற்றுமையையும் அதற்குக் கொடுத்தருளும். சதாகாலஞ் சீவியரும் இராச்சிய பாரம் பண்ணுகிறவருமாயிருக்கிறவரே, ஆமென்யேசு.

**மு.** தவறிப்போன சகலரையும் திருச்சபையின் ஒற்றுமைக்குள் திருப்பி அழைக்கவும் அவிசுவாசிகள் அனைவரையும் சுவிசேஷ வெளிச்சத்திற்குக் கொண்டுவரவும் கிருபைசெய்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

**து.** எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி.

**மு.** யேசுவின் மதுரமான திரு இருதயமே எங்கள்மேலும் தவறிப்போன சகோதரர்மேலும் இரக்கமாயிரும். (3 முறை)

ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவே! உலகத்தின் இரக்கம் நிறைந்த இரட்சகரே! உமதுமந்தையைவிட்டு அலைந்து திரியும் ஆடுகள் அனைத்தையும், ஆத்துமாக்களின் ஆயரும் பரிபாலகருமாகிய உம்மிடம் இழுத்துக்கொள்ளும்படி, உம்முடைய திரு இருதயத்தின் பேரால் உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம். சதாகாலமும் சீவியமும் இராச்சியபாரம் பண்ணுகிறவரே, ஆமென்.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்துராதிகளுக்கும், தீங்கிழைப்போருக்கும் எதிராகச் செபம்

**சபைச் செபம்**

*பிரார்த்திப்போமாக*

கர்த்தாவே! எங்கள் சத்துராதிகளின் அகந்தையை அடக்கி, அவர்கள் பிடிவாதத்தை உமது வலதுகரத்தின் வல்லமையால் முறியடித்தருளும்படி தேவரீரைக் கெஞ்சி மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டை எங்களாண்டவராகிய கிறிஸ்துநாதர் மூலமாய் ஏற்றுத் தந்தருளும், ஆமென்.

**ஏகாந்த செபம்**

கர்த்தாவே, இந்தப் பரம இரகசியத்தின் வல்லமையினால் நாங்கள் எங்கள் அந்தரங்க பாவங்களில் நின்று கழுவப்பட்டு, எங்கள் சத்துராதிகளின் சதிமானங்களில் அகப்படாது காப்பாற்றப்படுவோமாக. இந்தமன்றாட்டை எங்களாண்டவராகிய கிறிஸ்துநாதர்மூலமாய் ஏற்றுத் தந்தருளும், ஆமென்.

**அனுபவிப்பிற்குப்பின் செபம்**

*பிரார்த்திப்போமாக*

எங்கள் பாதுகாவலராகிய சருவேசுரா! எங்களைத் திருக்கண் நோக்கிப் பார்த்து, எங்கள் சத்துராதிகளின் சர்ப்பனைகளில் நின்று எங்களைக் காப்பாற்றியருளும். இவ்வண்ணம், சகல தொந்தரவுகளும் நீங்கி, நாங்கள் தேவரீருக்கு அமைதியான உள்ளங்களுடன் ஊழியம் பண்ணச் செய்தருளும். இந்த மன்றாட்டை எங்களாண்டவராகிய கிறிஸ்துநாதர் மூலமாய் ஏற்றுத் தந்தருளும், ஆமென்.

மேற்படி செபம் திவ்விய பூசையில் கட்டளைச் செபமாக மீண்டும் அறிவித்தல் கொடுக்கும்வரை சொல்லப்பட வேண்டுமென்று விரும்புகிறோம்.

+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை,
யாழ்ப்பாண மேற்றிராணியார்,
10-1-61.

# ஆசா. யோசேவாஸ் முனிந்திரரின் 250-வது மறைவுதின ஞாபகார்த்தம்

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

னார். அவர்களுக்கு வேதம் போதிப்பதிலும், அவர்கள் பாவ சங்கீர்த்தனம் கேட்பதிலும் இரவைக்கழிப்பார்.

"தாமே தனித்துப் பணிபுரிய முடியாதென உணர்ந்துப், தமது ஆயுள் 10, 20 ஆண்டுகளுக்கு மேல் நிலையாதென அறிந்தும் இச்சேவைக்காகப் பிறகுருமாரை இங்கு அழைக்க அரும்பாடுபட்டார். அவ்வுதவி கிடைக்கப்பெற்றதும், அக்குருமாருக்கு நிலைமைக்குவேண்டிய அறிவுணர்த்தி, பொறுப்புக்களை அதிகமதிகம் சுமத்தி இறுதியில் தமது மரணத்தின்போது அவர்கள் பூரண பொறுப்பேற்கக் கூடியவர்களாக்கினார்.

"எமது அப்போஸ்தலர்புரிந்த ஊழியத்தின் சுருக்கவரலாறு இதுவாகும். மோட்சத்திலிருந்து எமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கும் எமது பிதா யோசேவாஸ் சுவாமிகள் எம்முடன் இருக்கிறார். **தமது ஊழியத்தை நினைவுறுத்துகிறார். அதைத் தொடர்ந்து செய்யும்படி வற்புறுத்துகிறார்**

"கத்தோலிக்க வாழ்க்கையை நிறைவுபடுத்தும் திவ்வியபூசைப் பலி—சமுகமாயிருப்போரெல்லோரும், ஞானவிருந்தருந்தி ஒப்புக்கொடுக்கும்பலி — எமது திருவேதத்தின் அச்சாணி என நாம் உணரவேண்டும். உணர்ந்தால் அதற்கு ஒரு குருவானவர் அவசியம். இது கர்த்தர் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கும். விசுவாசிகள் நற்கருணை அருந்துவதற்கும் குருவானவர் அவசியமாகின்றார். இப்பூசைப்பலி எப்பொழுதும் நடந்துகொண்டிருக்கவேண்டும். ஆகவே, குருமார் இடையீடின்றி ஏற்படவேண்டும். பூசையும், குருவும் கடவுளின் குடும்பங்களுக்கேயாம். எனவே இவை இரண்டையும் தரவேண்டியவர்கள் கர்த்தரின் பிரசைகளேயாவர்.

"**அன்னைமரி அனைவருக்கும் தாய். அனைத்துக்கும் அச்சாரம். இல்லத்திற்கோ பீடச்சேவைக்கோ வேண்டிய இகபர வரங்கள் யாவற்றுக்கும் ஞானக்களஞ்சியமாகத் திகழ்கின்றவள் தேவதாய். தாயைச் சேய் அண்டிப்போவது போல யோசேவாஸ் முனீந்திரரும், அன்னையை வேண்டினார்.**

இன்று நாமும் அப்படிச்செய்ய நம்மை ஏவுகின்றார் அவர். அவரது வாழ்க்கையின் உணர்ச்சி ததும்பும் சம்பவங்களை நமது இல்லங்களில் கூறிக்கூறி நினைவுபடுத்தி அவைகளால் தூண்டப்பெற்று, அவரைப்போல் எம்மிடமும், பிறரிடமும் விசுவாசம் நிறையவேண்டுமென்ற வாஞ்சை கொள்ளுவோமாக.

"எமது இக்கட்டான நிலைமை வேண்டிநிற்கும் ஞானவாஞ்சை நமது இல்லங்களில் வாலிபரிடமும், வயோதிபரிடமும் பரஸ்பரம் உற்சாகமூட்டப்பட்டுவதனால் கொழுந்துவிட்டெரிந்து இருவிதமாய் விளங்கவேண்டும். அதாவது நாம் எமது விசுவாசிகளுக்குக் கூறியபடி நித்தியசெபமாலை சொல்லுதலையும், வாரநாட்களில் ஒருமுறை பூசைப்பலிக்குச் சமுகமாயிருப்பதையும், கைக்கொள்ள வேண்டும்.

"இவ்வாறாய் முனீந்திரரின் மறைவுநாளை தைமாதம் 16-ந் திகதி ஞாபகப்படுத்துவதுடன், ஆண்டுமுழுவதிலும், நினைவுறுத்தலாம். அது மாத்திரமல்ல கடவுளின் மதிக்கரிய மாணிக்கமும் எமது முதுசமுமான கத்தோலிக்க வாழ்க்கைமுறை என்னும் பொக்கிஷத்தை வருங்காலச் சந்ததியினருக்குக் கையளித்தற்கு நாம் நடத்தவேண்டிய போருக்கு அவசியமான பூரண திட்டம் இதுவே என்று உறுதிகூறுகிறோம்."

# இலங்கையின் இரட்சா பிதா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மனந்திருப்புதல் பலன் அறுவடை செய்கிறாரெனவும் அறிகிறேன்." (Boudens, O. M. I.)

முன்கூறியதில் குறிப்பிட்டிருக்கும் நெல்வருஷித்த சம்பவம் அவரால் செய்யப்பெற்றதாகச் **செபஸ்தியான் டோ ரேகோ** சுவாமிகள் குறிப்பிடும் அற்புதத்தைக் குறிப்பிடுகின்றது போலும். அதாவது, கடும்வரட்சியாயிருந்த ஒருமுறைநெல்சாகுபடி செய்ய முடியாமல், உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டபோது, கண்டியில் மறியற்காரனைப்போல் இருந்த வாஸ்சுவாமிகள் மழைவருஷித்துத் தமது நாமத்தை மகிமைப்படுத்தும்படி கடவுளை வேண்டினார். அவர் மன்றாட்டுக் கேட்கப்பெற்று, வெகுசீக்கிரத்தில் முக்கிய உணவாகிய நெல் ஏராளமாகப்பெற்றார்கள்.

## வழிகாட்டியும், மாதிரியும்

யோசேவாஸ் சுவாமிகளின் துணைவர்கள் அவரைத் தங்கள் வழிகாட்டியும், மாதிரியுமென மதித்தார்கள். தமது தலைவருடன் தேவதொண்டு புரிய 1703இல் இலங்கைக்கு வந்த **பேதுரு த சல்தானா**சுவாமி கோவையிலிருந்து தமது சபைத்தலைவருக்கு 1705இல் குறிப்பிட்டு எழுதியதாவது: "எனது பிதாவும், அதிபருமான வண. யோசேவாஸ் சுவாமிகள் அல்லும் பகலும் ஆண்டவருடைய ஊழியத்தில் ஈடுபடுகிறார். சுகவீனமாய் ஓய்வெடுக்கக் கட்டளைபெற்றாலன்றி, அவர் தாமாகவே ஓய்வெடுத்ததை நான் கண்டதில்லை. இரவு வெகு சொற்பமாக உறங்குகிறார். நெடும் பிரயாணங்களுக்கும், வெகு உயரத்துக்கு ஏறுவதற்கும், ஆழத்துக்கு இறங்குவதற்கும் அவசியமான உணவை மக்கள் தம்முடன் கொண்டுசெல்கின்றனர். அத்துடன், பல வசதியீனங்களையும் அனுபவிக்கின்றனர்.

இவை எல்லாவற்றையும் கடவுளுடைய அன்புக்காகச் செய்யும் எனது அதிபர் இத்துன்ப துரிதங்களைப்பற்றிப் பேச நான் கேட்டதில்லை. எமது கோவில் உள்ள இடத்தில் குளிர்மிகுதியாய் உண்டு; அதைப்பற்றியும் அவர் பேசுவதில்லை. சுவாமியாரின் வாழ்க்கை ஒரு புதுமையென்றே கூறவேண்டும்." (Orct Miss. P. 31).

## அரச மதிப்பு

கண்டி அரசன் **விமல தர்ம சூரிய II** வாஸ்சுவாமிகள் மட்டில் நல்லெண்ணம்கொண்டிருந்தது மாத்திரமல்ல, அவரைத் தனது இராச்சியத்திலிருந்து அப்புறப்படுத்த டச்சுக்காரர் செய்த சகல பிரயத்தனங்களையும் தோற்கடித்தான். பலர் கத்தோலிக்காய் மனந்திரும்பியபடியால், தமது தெய்வங்களுக்கு வணக்கம் குறைந்துவிட்டதெனக் குற்றஞ்சாட்டிய குருக்கள்கூட அரசனுடைய மனதை மாற்றமுடியவில்லை. நேர்மையும், நற்குணமுமுள்ள அவ்வரசன் சுவாமிகளில்கொண்ட நல்மதிப்பின் நிமித்தம் விரோதிகளுடைய குற்றச்சாட்டுகளுக்குத் தானே மறுப்புக் கூறுவான்.

வாஸ்சுவாமிகளின் திரு ஊழியத்திற்கு வழிதிறந்த சம்பவம் ஒன்று கண்டியில் நிகழ்ந்தது. 1657ன் நடுக்கூற்றில் கண்டியில் அம்மைநோய் பரவியிருந்தது. இந்நோய்ப்பட்டவர்கள் நோயால் இறந்துபோகாவிட்டாலும், பயப்பிராந்திகொண்ட மக்கள் அவர்களைப் பராமரியாது கைவிட்டபடியால் அநேகர் இறந்தனர். அம்மைபிடித்தவர்கள் பலர் காட்டில் கைவிடப்பட்டனர் என அறிந்து, அவர்களுக்கெனச் சிறுகுடிசைகள் அமைத்து, சீதோஷ்ண பாதிப்பிலும், கொடிய விலங்குகளுக்கு இரையாவதிலுமிருந்து பாதுகாத்தார். நாளில் இருமுறை அவர்களைச் சந்தித்து உணவு, மருந்து உடைகொடுத்தும் நோயாளிகளைக் கழுவியும் வருவார். தொடக்கத்தில் அவர் மருகரான **யோசெவ் கார்வால்கோ** சுவாமியார் மாத்திரமே உதவிபுரிந்தார். இவர்களுக்கு வியாதி தொற்றாததைக்கண்ட கண்டிக் கிறிஸ்தவர்கள் சிலர் உதவிபுரிய முன்வந்தனர். **விஜித்தவெல்ல ரஜவலிய** (ரஜவலியவின் தொடர்ச்சி) எனும் நூலை எழுதிய புத்தசமயத்தவர் இச்சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய பரிசுத்தம் வாய்ந்த எமது பிதாவும், அப்போஸ்தலருமான ஆசா. யோசேவாஸ் முனீந்திரனுக்குத் திருச்சபை அதிகாரபூர்வமாக வணக்கம் செலுத்தும் உத்தரவைத் தரும்படி நாம் அனைவரும் ஆசித்துவேண்டுவது எம் நன்றிக்கடன் என்க.

M. J. M.

## ஓர் அழகான சிறிய நூல்

"கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்" எனப் பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற அப்போஸ்தலரும், வேதசாட்சியுமான அர்ச். யூதா ததேயுவின் சீவியத்தினதும், சுவிசேஷத்தொண்டினதும் சரித்திரச்சுருக்கம் அடங்கிய அழகான சிறியபுத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இஃது கத்தோலிக்க இலக்கியச்சபைச் செயலாளர் திரு. ஐ. வி. பேடினன்ட் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுப் பரிமேலர் எஸ். அருளானந்தம், கே. எஸ். ஜி. அவர்களால் தமிழாக்கஞ் செய்யப்பெற்றது. அர்ச். சூசையப்பரும், தேவதாயாருமாகிய இருவரது வம்சவழியாலும் நம்முடைய திவ்வியஇரட்சகருக்கு அதிகம்நெருங்கிய சுற்றத்தவரான அர்ச். யூதா ததேயுவின் அப்போஸ்தல தொண்டு, அவருடைய வேதசாட்சியத்துவம், நிருபம், இனிமேல் ஆற்றாதென்று அல்லலுறும் வேளையிலே தவறாது ஆறுதல் அளிக்கும் அவருடையவல்லமை, இலங்கையிலே அவரின்பக்தி பரம்பியவிதம், ஒரேயொருபதியாய் எமதுநாட்டிலே கம்பாகாவுக்குச் சமீபமாய் அவர் கோவில் கொண்டிருக்கும் இன்டிகொல்லஎனும் தலம், அவருக்குச் செய்யத்தகும் நவநாள்பத்தியனுசாரம் ஆதியன பற்றிய விபரங்கள் இந்நூலை வசீகரஞ் செய்கின்றன. கொழும்பு, அதிமேற்றிராணியாண்டவர் அவர்கள் இதற்கு அளித்திருக்கும் மதிப்புரையும் இதனைச்சிறப்பிக்கின்றது. அர்ச். யூதா ததேயுவின் பக்தர்களுக்கெல்லாம் இந்நூல் ஒருசிறந்த பொக்ஷமாகும்.

**கிடைக்கும் இடம்:** கத்தோலிக்க புத்தகசாலை, அர்ச். பிலிப்புநேரியார்கோவில், பெற்றா, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

இந்த மாதம் 16-ம் நாள் எமது ஞாபகத்துக்குரிய தினம். இலங்கையில் எமது திருவேதத்தை அழியவிடாமற் பாதுகாத்து வளர்த்துவிட்ட எமது அப்போஸ்தலரது 250-வது மரண தினம். அன்றுதான் உங்கள் பாடசாலைகளும் புதுத் திட்டப்படி ஆரம்பமாகும். ஒல்லாந்த ஆட்சியாளர் இலங்கையில் கத்தோலிக்க சமயத்தை விரோதித்து, குருமாரின் சேவையைத் தடைசெய்து, குருமாரின் தலைக்கறுப்புக்கூடத் தெரியவிடாமற் சட்டம் ஏற்படுத்தினர்.

இந்த இக்கட்டான நிலைமையில், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து, பகலில் பிச்சைக்காரன் போலத் திரிந்து, இரவில் கிறீஸ்துவர்களைத் தரிசித்து, ஞான ஆறுதல்களைக் கொடுத்து, உறுதியளித்து, ஆன்ம உயிர் வளர்த்தார் அவர். யார் தெரியுமா? ஆசாரத்துக்குரிய யோசேவ்வாஸ் முனிவர் சுவாமிகள். அர்ச். சவேரியாருக்குப்பின் எமது ஞானப் பிதா இவர்தான்.

இவரது வாழ்க்கையையும், தியாகத்தையும், திரு ஊழியத்தையும் பற்றி நாம் அறியவேண்டும். அவர் அரும்பாடுபட்டு எமக்களித்த பரமகொடையை உயிர் என மதித்துக் காத்து, பிறரும் அடையச் செய்யவேண்டும்.

ஆசா. யோசேவ்வாஸ் முனிவர் பீட வணக்கத்துக்குரியவராகும் நாள் அண்மிவரவேண்டுமென அமலனைப் பிரார்த்திப்பது எமது நன்றிக்கடன் என்க.

உங்கள்அன்புள்ள அண்ணு

# தயாள உள்ளம்

—( போல் அந்தோனி )—

## முன்பாகத்தின் சுருக்கம்:

வயதுசென்ற கிழவர்ஒருவர் தெருவோரத்தில்இருந்து பிச்சை கேட்டுக்கொண்டிருக்கிறார். வழமைபோல் பாடசாலை முடிந்து டேவிட் அக்கிழவரிடம்வந்து சம்பாஷிக்கின்றான். கிழவருக்குச் சிறு உபகரிப்புச் செய்துவிட்டுப் பாடசாலைவிடுமுறை ஆரம்பித்து விட்டதென்று கூறுகிறான். அவனைப் பலநாட்களுக்குக் காணமுடியாதே என்று ஏங்கியகிழவருக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வந்து சந்திப்பேன்என்று ஆறுதல்கூறி வீட்டுக்குப்போகிறான் டேவிட். மிகுதியைத் தொடர்ந்து கீழேபடியுங்கள்.

மயிலாடி மூதூரிலேயே நல்ல கொழுத்தபணக்காரர் சூசைநாதன். ஆனுல், பணத்திற்கேற்ற பெருமையோ, திமிரோ இருக்கவேண்டுமே. அதுதான் அவரிடம் மருந்திற்குக் கூடக் கிடையாது. அவரது அருங்குணத்திற்கேற்ற அருமையான மனைவி அன்னம்மாள். இந்த அருங்குணம் படைத்த அன்புத் தம்பதிகளுக்குக் குமாரனுய் வந்துதித்தான் அழகும், அறிவும், நற்பண்பும் படைத்த டேவிட். அவனைத் தவிர ஒரு பெண்குழந்தையும் இருந்தாள். அவள் பெயர் பிலோ. "ஆஸ்திக்கொரு ஆணும், ஆசைக்கொரு பெண்ணும்" கிடைத்திருந்தார்கள் சூசைநாதனுக்கு. அழகுச் சிலைகளான இந்த இரண்டு கண்மணிகளையும் அன்பூட்டிப் பண்போடு வளர்த்தார் அவர்.

அருங்குண சீலர்களுக்குப் புத்திரனுய் உதித்த டேவிட் அந்தப் பகுதியிலே பெயரும், புகழும் பெற்றிருந்த கத்தோலிக்க பாடசாலை ஒன்றிலே படித்துவந்தான். அப்போது அந்தப் பிச்சைக்காரக் கிழவனுக்கும் அவனுக்கும் பழக்கம் ஏற்பட்டது. கிழவர் யாரோ அவன் அறியான். அவன் யாரோ கிழவர் அறியார். அப்படியிருந்தும் அவர்கள் உறவு பூண்டுவிட்டனர். கல்லூரியிலே பகல் சாப்பாட்டிற்காகப் பணிஸ் கொடுப்பார்கள் அல்லவா! அதை எல்லா மாணவர்களும் உண்பது கிடையாது. சிலர் எறிந்துவிடுவார்கள். இப்படி எறியும் மாணவர்களிடம் கெஞ்சிக்கேட்டு அவைகளைவாங்கிக் கிழவனுக்குக் கொண்டுவந்து கொடுத்துவிடுவான் டேவிட். இப்படியே வளர்ந்த அவர்களது அன்பு தாத்தாவும், பேரனும் போல் மாறிவிட்டது நாளடைவில்.

டேவிட் விடுமுறைக்காகச் சென்ற பிறகு கிழவருக்கு அப்பங் கொடுப்பார் யாருமில்லை. இரண்டு வார்த்தைகள் அன்பாகப் பேசுவார் யாருமில்லை. 'தாத்தா' என்னும் அன்புக் குரல் அவர்காதுகளில்கேட்கவில்லை. மணி 12 என்று காட்ட மாதா கோவில் மணியே அவருக்கு உதவியது. அப்பொழுதெல்லாம் டேவிட் வரமாட்டானு? என்று எண்ணும் கிழவரின் ஏழையுள்ளம்.

டேவிட் கொடுத்துச்சென்ற ஐம்பதுசதமும், சில தயாள உள்ளம் படைத்தவர்களின் உபகாரமும் அவருக்கு ஆறுதலளித்தன. வெள்ளிக்கிழமையோடு டேவிட் கொடுத்தது செலவாயிற்று. வழிப்போக்கர் கொடுத்ததும் செலவழிந்தது. சனிக்கிழமை காலை 12 சதம் கிடைத்தது. அதுதான் அன்றுமாலைவரை அவருக்கு ஆறுதல் கொடுத்தது. மறுநாள் பொழுது விடிந்தால் டேவிட் வந்துவிடுவான். ஒருநாள் இடையிலே இருந்தது. சில சமயம் கிழவனுரின் குருட்டுமனம் "இன்று ஞாயிற்றுக்கிழமையாக இருக்கக் கூடாதா?" என்று எண்ணும். மறுகணம் "ஐயா! தர்மம்" என்று அவரது குரல் வேலைசெய்ய ஆரம்பித்துவிடும்.

மறுநாள் விடிந்துவிட்டது. கிழவரின் கண்கள் கூர்மையாகிவிட்டன. டேவிட் வரும் வழிமீது வழிவைத்து ஆவலுடன் காத்திருந்தார். தூர யாராவது சிறுபையன் வருவது தென்பட்டால் "டேவிட் வந்துவிட்டான்" என்று மலர்ந்து குழியைவிட்டு வெளிவரும் அதே விழிகள். பையன் நெருங்கிவந்ததும் ஏமாந்து உள்ளே ஓடும்.

அந்தப் பகுதியில் கத்தோலிக்கர் குறைவு. கோவிலில் அவ்வளவு கூட்டமில்லை. பூசை முடிந்தபின் வந்திருந்த உறவினர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தனர் சூசைநாதனும், அன்னம்மாளும். தங்கையைக் கூட்டிக்கொண்டு, "அங்கே பார்", "இங்கே பார்" என்று வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தான் டேவிட். அப்பாவும், அம்மாவும் உறவினர் கூட்டத்தில் மும்முரமாக மூழ்கிவிட்டனர். டேவிட் தங்கையைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிட்டான் கிழவரிடம்.

ஒருவாரம் காணுதிருந்து கண்டதும், துடிதுடித்து மலர்ந்தன கிழவரின் விழிகள். டேவிட்டின் கரங்களைப் பற்றிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். "டேவிட்! உன்னைக்காணுதது எங்கோ இருட்டறையில் கிடந்தமாதிரி இருந்தது."

"எனக்குமட்டும் ...?" உண்மையான தாத்தாவிடம் செல்லமாகக் கொஞ்சும் குரல் அது. "ஏன் தாத்தா சோர்ந்துபோயிருக்கிறுய்? சாப்பிடவில்லையா?"

கிழவரிடமிருந்து பதிலாகக் கிடைத்தது மௌனம்தான். தங்கையையும் இழுத்துக்கொண்டு அருகேயிருந்த கடையுள் புகுந்தான்டேவிட். இரண்டுநிமிடங்களிலே கையில் ஒரு பொட்டணத்துடன் திரும்பினுன். "இந்தா தாத்தா, சாப்பிடு." கிழவரின்மடியில் பொட்டணத்தை வைத்தான்.

"இது யார் டேவிட்?" கிழவரின் கண்கள் பிலோவை நோக்கின.

"என் தங்கை தாத்தா! பெயர் பிலோ."

"அதுதான்; உன் மாதிரியாக இருக்கு."

"பிலோ, தாத்தாவுக்கு நமஸ்காரஞ் செய்" என்று டேவிட் தங்கையின் தலையை வருடிவிட்டான். அந்தப் பால்மணம் மாருத பச்சைக் குழந்தை ரோசா இதழ்களைச் சுருட்டி வைத்தாற்போன்ற தன் பிஞ்சுவிரல்களை ஒன்றுசேர்த்துக் கரங்களைக் கூப்பியது.

தன் வாழ்நாளிலேயே கண்டறியாத ஏதோ ஒருபுதிய இன்பத்தைக் கண்டுவிட்டார் கிழவர். கண்களை மூடி ஆழ்ந்த பெருமூச்சொன்று விட்டார். அவரது மெலிந்த கரங்கள் பிலோவை வாரியெடுத்து முத்தமிடத் துடித்தன. ஆனுல், ஏனோ தெரியவில்லை அவர் அப்படிச் செய்யாதது.

"அம்மா தேடுவாங்க; வருகிறேன் தாத்தா." டேவிட் தன் தங்கையை ஒருகையால் பற்றிக்கொண்டு கால்களை நகர்த்தினுன்.


"அம்மாவும் வந்திருக்கா?" அடியெடுத்துவைத்த அவனை நிறுத்தியது கிழவரின் கேள்வி.

"ஆமாம், அப்பாவுங்கூட ...; நேரமாகிறது. நாங்கள் போகிறோம்." டேவிட் தங்கையை அழைத்துக்கொண்டு கோவிலை நோக்கி விரைந்தான்.

அந்த அழகுக் குழந்தைகள் துள்ளு நடைபோடும் காட்சியைக் கண்டு கிழவர் மகிழ்ந்தார். "அவைகள் என் குழந்தைகள்" என்று ஒரு பெருமூச்சுவிட்டார். அதிலே பாசம் கலந்திருந்தது.

"எங்கே டேவிட் போயிருந்தாய்?" என்றுசெல்லமாகக்கடிந்துகொண்ட தாயிடம், "பிலோவுக்குப் புகை வண்டி காட்டினேனம்மா" என்று கூறித் தப்பித்துக்கொண்டான். கள்ளம்அறியாக் குழந்தை பிலோகூடத் தன் தலையை ஆட்டி அவனுக்குச் சாட்சியமளித்தாள்.

(தொடரும்)



திரு. பிலிப் ஜேக்கப்அவர்களின்

## 3-ம்வருட மரண ஞாபகம்

பிறப்பு: 7-8-26 இறப்பு: 15-1-58

என்றும் எங்கள் மனதைவிட்டுமறவாத திரு. பிலிப் ஜேக்கப், மனைவிமக்களையும், பந்துமித்திரர்களையும் கதிகலங்கச்செய்துவிட்டு, இம்மண்ணுலக வாழ்வைநீத்து விண்ணுலக வாழ்வெய்தின 3-ம்வருடம் நிகழும் 15-1-61-இல் பூர்த்தியாகிறபடியால், இதைக்கண்ணுறும், வண. குருப்பிரசாதிகளே, சங். கன்னியர்களே, விசுவாசிகளே இவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு வினயமாகக் கேட்கின்றோம்.

இவரைப்பிரிந்து துயருறும்:

மனைவி: ஜே. யேசுமலர் பெனடிக்ரா,

மைந்தர்: ஜே. அன்ரன் குலசேகரம்,
ஜே. யோசெவ் ஞானசேகரம்,
உறவினரும்.

திரு. ஜே. அல்பேட் அவர்கள்
அமரபதம் அடைந்த

## முதல்வருட ஞாபகம்

பிறப்பு: 16-3-1917 இறப்பு: 11-1-1960

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரிப் பழையமாணவரும்; கொழும்பு மேக்கன்ரைல் வங்கியில் கடமையாற்றியவரும் பின்னர் 1942-இல் பிரித்தானிய இராணுவ 8-ம்படையிலும், 1944-இல் தளபதி லோட் மவுண்பேற்றன் பிரபுவின் தென்கிழக்காசிய படையிலும் சேவையாற்றியவருமான திரு. ஜே. அல்பேட் அவர்கள் தமது பிரியமனைவியரையும், ஆறுபிள்ளைகளையும்பிரிந்து மரணத்திரையில்மறைந்த முதலாண்டு நிறைவுதினம் 11-1-61-இல் பூர்த்தியாயிற்று. இதைக் கண்ணுறும் சகலரும் கிறிஸ்தவ கருணையுடன் அவரின் ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரக்கமுள்ள யேசுவே! இவ்வாத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் — முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக் கடவது. ஆமென்.

சி. சூசைப்பிள்ளை

● தன் சுயபலத்தால் புண்ணியத்தைச் செய்ததாக நினைக்கும் ஆத்மா, தனதுபலனை அதிகம் இழந்துவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதர் பக்கம்

# நடிகை

இரவு எட்டுமணியிருக்கும். தெருவூடே ஜனங்களின் நடமாட்டம் அந்நேரம். பதினைந்து வயதுள்ள அலங்கார பூவை ஒருவள் பலகணி வழியே கீழே குதித்தாள். கணப்பொழுதில் பெருங்கூட்டம் அவளை வளைந்துகொண்டது. காரணம் விசாரிக்குமிடத்து, ஆ! என்னபயங்கரம். குடிகாரத் தந்தையும், நெறிகெட்ட தாயும் சுடுபட்டுக் கிடந்தனர். துப்பாக்கிச் சூட்டிலிருந்து தன்னைத் தப்புவிக்கும் பொருட்டே இளம்மாது இவ்விதம் செய்தாள் என அறியவந்தது. தப்பி ஓடியவள் தையல்வேலை புரிந்து தனம் தேடலானுள். தன் வேலையிலீடுபட்டிருக்கும்போதே தன்னையும் மறந்து இனிய கீதங்கள் பாடுவாள். குரலோ குயிலின்குரல். எழில்மாது ஆயின் உலகையறியாள் வஞ்சகநெஞ்சில்லை. எதார்த்தகுணம். அவளின் கீதத்தில் லயிக்காதவரேயில்லை. நாளடைவில் அவளது குயிலினினிய குரலின் பெருமை ஐரோப்பிய நாடெங்கும் பரவவே நடிகர் பலர் அவளை அண்மினர். பெரும் பணம் கொடுப்பதாக வாக்களிக்கவே திக்கற்ற தையல் என் செய்வாள்? பாவம்! நடனக்காரியானுள். சகல நாடகங்களிலும் ஆடினுள், பாடினுள், நடித்தாள். வீங்கு புகழுடன் பணமும் குவிந்தது. கணமொரு கோலம். தினமொரு தோற்றம். அவளது மயிலினினிய தோற்றமும், குயிலினினிய குரலும், நடனத்திறனும் யாவரையும் அவள்பாலீர்த்தன. ஆசாபாச உலகம் இவளைச்சும்மாவிடுமா? பேதைப்பெண் கெட்டாள். மாசற்ற இதயம் மாசுற்றது. ஆசாபாசத்துக் கடிமைப்பட்டாள். பாவச்சேற்றில் உழன்றுள். மதிமோசம் போனுள். இதயத் தூய்மை குன்ற இனந்தெரியாத பயமும், ஏக்கமும் அவள்மனதை அரித்து வாட்டியது. ஆனுல், உலகப்புகழ் தினமும் வளர்ந்து உச்சநிலையை அடைந்தது. சக்கரவர்த்தி 'ஏழாம் எட்வேட்'டும், அமெரிக்க ஜனுதிபதி 'றூஸ்வெல்ட்' அவர்களுமே இவளைப் பார்க்க வந்தனரெனில் இவளது கீர்த்தியைச் சொல்லவும்வேண்டுமா? நாடக உலகில் திலகமெனத் துலங்கினுள். பணத்துக்குமேல் பணம் குவிந்தது. செல்வச் செருக்கு, டாம்பீக வாழ்வு, தனவந்தர் உறவு, அழகின் மேட்டிமை அத்தனையும் சேர்ந்து இவளைத் தற்பெருமையின் உச்சநிலையில்நிறுத்தின. இத்தனையிருந்தும் இவளுக்கோ மனநிம்மதியில்லை. ஏழைப்பெண்ணுயிருந்தபோது அனுபவித்த மனச்சாந்தி இப்போ இல்லை. ஏன்? உளத்தூய்மையைப் பறிகொடுத்துவிட்டாள் பணத்துக்கு. என்ன பரிதாபம்! "தூய இதயமுடையவர்கள் பாக்கியவான்கள் ..." "ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தன் ஆத்துமத்தையிழந்தால் ... ..." என்ற கர்த்தரின் திருவாய் மொழிகள் பொய்க்குமா?

மனப்பாக்கியத்தை இழந்த மங்கை மனவேதனை தாங்கமுடியாது தவித்தாள். மனப்புழுவால் அரிபட்டு வருந்தும் ஆன்மாவை ஆறுதற்படுத்தும் தூயநண்பரை அவள் அண்டினுல் அவள் வேதனை பரிதிமுன் பனியாகுமன்றோ! அவ்வழி காட்டுவோர் எவருமேயில்லை. ஆகையால், வேதனையைத் தாங்கமுடியாது தவித்தவள் 'சாவதே மேல்' எனக் கொண்டு தற்கொலை செய்யத் துணிவுகொண்டாள். தன் சதித்திட்டத்தை நிறைவேற்றத் தருணம் பார்த்திருந்தாள். இரவு பதினெரு மணியிருக்கும். இவளின் ஆட்டத்தைப் பார்ப்பதற்காகப் பரீஸ் நாடகசாலையில் பல்லாயிரம் ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆயினும் ஆட்டக்காரி "லவாலியேரை" (இதுதான் அவளின் நாமம்) காணவில்லை. மனவேதனை தாங்கமுடியாத லவாலியேர் பரீஸுக்கு அருகிலுள்ள ஆற்றிலிறங்கி உயிரைமாய்க்கக் கருதினுள். தனது தீச்செயலை நிறைவேற்ற ஆற்றிலிறங்கும் வேளையில் காவலன் ஒருவன் அவளைக் கைப்பற்றுகப் பிடித்திழுத்து யாரென நோக்குமிடத்து, நடனமாது லவாலியேரெனக் கண்டதும் திடுக்குற்றுன். ஏன் இவ்விதம் செய்தாய்? பல்லாயிரம் ஜனங்கள் கூடியிருக்க அவர்களை ஏமாறவைத்து இந்த வேலை செய்ய ஏன் துணிந்தாய்? எனக் கேட்டதற்கு, "எனக்கு உண்மைச் சந்தோஷமில்லை; ஆகையால், வாழ்ந்து பிரயோசனமென்ன? என்று கருதியே உயிரைமாய்க்கத் துணிந்து வந்தேன்" என்றுள்.

நாடகசாலையில் காத்திருந்த ஜனங்களுக்கு நடனமாதிற்கு உடம்பு அசௌக்கியம் என அறிவிக்கப்பட்டது. கவலையுடன் வீடுதிரும்பினர் யாவரும். "உலகம் வெறும் நாடக மேடை", நீரிற்குமிழி இந்த நீணில வாழ்வு", "பெண்ணினம் வெறும் சிற்றின்பத்துக்கான கருவியல்ல" என்று சிந்தித்தாள். கிராமப்புறத்தில் மாளிகை ஒன்று வாங்கினுள். தோழியொருத்தியுடன் தனிவாசம் துவக்கினுள். அக்கிராமத்தின் பங்குக்குரு அடிக்கடி அவளைச் சந்தித்து, அன்பாய்ப்பேசி, ஆறுதலுரைப்பார். நாளடைவில் குருவானவரின் முயற்சியால் ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்குப் போகத் துவங்கினுள். சுவாமியார் யேசுவின் திருஇருதயத்தில் நம்பிக்கை வைத்து இப்பாவியை முழுதும் மனந்திருப்பிப் புனிதவதியாக்கும் நோக்குடன் 'நாடறிந்த பாவி' என அழைக்கப்படும் மதலேனுளின் சரிதையைச் சிறிதுசிறிதாக ஆயின் தெளிவாக எடுத்துக்கூறினுர். மூன்றுவார முடிவில் என்ன மனமாற்றம்! நடனமாது தன்னிலையை உணர்ந்தாள். அழுதாள். விம்மினுள். சுவாமியார் பாதத்தில் விழுந்து கண்ணீரை மழையாகக் கொட்டினுள். "சுவாமி! தாங்கள்கூறிய மதலேனுள் நான்தான். நான்தான் அப்பாவி. என் நடையாலும், நடிப்பாலும் எத்தனையோபேரை மயக்கிப் பாவத்தில் விழுத்தியவள் நான்தான். எனக்கு மன்னிப்புண்டா பிதாவே?" என்று கதறினுள்.

"மகளே! பயப்படாதே; இரக்கமுள்ள தேவன் எங்கள்பிதா; அவரின் இரக்கத்துக்கு எல்லையில்லை; மனந்திரும்பும் பாவியை இருகரம் விரித்து அணைக்கிறுர்; மகளே! உன்னை மன்னிப்பது மாத்திரமல்ல, தன் பத்தினியாகவும், புனிதவதியாகவும் ஏற்றுக்கொள்ள யேசு இதோ தயாராயிருக்கிறுர் என்று சொல்லிச் சுவாமியார் அவளைத் தேற்றினுர்.

பொதுப் பாவசங்கீர்த்தனம்செய்து புதுநன்மைவாங்கினுள் லவாலியேர். அவள் உடை, நடையாவற்றிலும் ஒரே மாற்றம். சீவியம் தவச்சீவியமாக மாறிற்று. அவள்தேடிய ஆன்மசாந்தியைத் திவ்வியபூசைகாண்பதிலும், திவ்வியநன்மை பெறுவதிலும் துய்த்தாள். தன்சொத்துக்கள் யாவையும் ஏழைகட்கும், தர்மஸ்தாபனங்களுக்கும் பங்கிடுசெய்தாள். நாய்களைப் போலத் தன்னில்லம் தேடிவரும் சண்டாளரின் கண்ணில்படாதபடி, தன்னூரைவிட்டு [illegible]ளுள். உரொட்டியும், தண்ணீருமே அவளதுபோசனம். அதுவும் ஒருவேளை. தனக்கு அழகுகொடுத்த கூந்தலையும் வெட்டினுள். முத்துப்போன்ற பற்களையும் உடைத்தாள். தன்வதனத்தையும் கீறிப்புண்படுத்தினுள். கொடுந்தபசால் தன்னுடலை வாட்டி வதக்கினுள். கடும் இருமல் அவளைவாட்டிற்று. ஆன்மகுருவால் சொந்தவூருக்கு அழைக்கப்பட்டாள். கொடியநோயிலும் கடினதபமுயற்சிகளைக் கைவிடவில்லை. அந்தியவேளை அண்மிற்று. "இறுதித் தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுள். திவ்விய நன்மைவாங்கி 'யேசு'என்னும் இனிய நாமத்தைப் புன்முறுவலரும்ப உச்சரித்து யேசுவில் துஞ்சினுள். அவள் கேட்டுக்கொண்டபடியே அவளது கல்லறையில் கீழ்வரும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டன.

என்பெயர் : ஒன்றுமின்மை
என் அன்பர் : யேசு

தற்கால நவீனஉலகின் இன்பமாய்கைகளில் சிக்குண்டு நாணமற்ற உடைநடை பாவனைகளால், உளத்தூய்மையை இழந்தோ, அன்றேல் இழக்கும் தருவாயில் நடந்தோ அல்லலுறும் இளம்பெண்மணிகளே! கட்டுக்கதையல்ல; உண்மையில்நடந்த மேற்படி சரிதையில் உம்போன்ற இளம்பெண்ணின் பிற்பகுதியை உங்கள்வாழ்வில் கைக்கொள்வீர்களேயாகில் மாசுற்ற உலகில் சீரற்றவாழ்க்கை நடத்தாது தேவனில் மனச்சாந்தியுடன் புனித வாழ்வு வாழமுடியும். உலகின் சீர்கேட்டை [illegible]யோசியுங்கள். பெண்ணினத்தின் பெருமையைச் சிந்தியுங்கள். அதனைக்காப்பாற்றும் வீரமணிகளாய் வாழமுயலுங்கள். மனம்மாறுங்கள் கத்தோலிக்கஉலகில்பெருமைபடைத்த [illegible]களாக ஆகுங்கள்.

# வீரமங்கையரே! விழித்தெழுவீர்!!

**மெய்மதத்தை மேலெனக் கருதி, கொலைஞரின் கோரத்தனத்திற்கஞ்சாது உயிர்மறைக்குச் சாட்சிசொன்ன வீர மங்கையர் பரம்பரையில் சூராய்ப் பிறந்த வீரிகளே! விழித்தெழுங்கள் !!**

சீருடன் செல்வமாக வாழ்ந்து, யாருடனும் அன்பாகப் பழகி, தானதருமம் கொடுக்கத் தயங்காது முன்வந்து, ஞானத்தில் வளர்ச்சியடைந்து, கல்வியில் மேதாவியாகி, பட்டம்பதவிகள் வகுத்து, அடக்கமே அணிகலமாய்க் கொண்டு, சிறப்புடன் வாழும் மங்கையரே! உங்களை இத்தகைய மேன்மை ஸ்தானத்தை வகிக்க வழிகாட்டிய புதிர், உங்களுக்குப் புரியவில்லையா? இதனைச் சிந்தித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா?

விழிக்காதீர்! வியப்புக்கொள்ளாதீர்! கத்தோலிக்க பாடசாலையின் கல்வியறிவும், ஒழுக்கவளர்ச்சியும், பெற்றேரின் நற்பழக்க வழக்கங்களும் இரண்டறக் கலந்து, நற்பெயரீட்டிப் புத்துயிர் பெறச்செய்ததை நீவிர் நினைவிழந்துவிட்டீர்களா?

அந்தோ பரிதாபம்! உங்களைச் சீராக்கிச் சீர்திருத்தவாதிகளாகப் பரிணமிக்க வழிகாட்டிய இரு செல்வங்களும், "ஏழைமக்களின் நல்வாழ்வுக்காக எதுவும்செய்யத் தயார்" என்று மார்பு தட்டி, பசப்பு வார்த்தைகளைச் சரமாரியாக வாரி வழங்கும் தற்கால அரசாங்கத்தின் கண்மூடித்தனமான செயலினுல் பாதிக்கப்பட்டு, காற்றில் அலைக்கப்பட்ட தீபம்போல் மின்னி மின்னி எரிகின்றன. மக்களின்நலனை அதுவும் ஏழைமக்களின் நலனை விரும்புவதாக அனுதாபம் காட்டும் அரசாங்கம், அவர்களின் தேடற்கரிய செல்வமாகிய, அவர்கள் வருந்தி இரத்த வியர்வை நிலத்திற் சொட்ட ஆயர்களின் அயரா உழைப்புடன் அரும்பாடுபட்டு உருவாக்கிய பாடசாலைகளை வலோற்காரமாய்ப் பறிமுதல் செய்கின்றனர்.

ஜனநாயக அரசாங்க மந்திரிமார் மேடைப்பேச்சின்போது தங்கள்கூற்று மக்களின் செவிகளில் ரசிப்புத்தன்மையுடன் ரீங்காரம் செய்வதை ஆசித்து 'தேசிய மயம்', 'பொது நலம்' முதலிய சொற்களைப் பிரயோகிக்கின்றனர். பாவம் ... அவர்களின் உரைநடை மக்களுக்கு வெறுப்புணர்ச்சியை எழுப்புவதை அவர்கள் உணராது விடுகின்றனர். கை எண்ணிக்கையைக் கொண்டு ஒரு சட்டத்தை உருவாக்கிவிட்டால், அதுதான் மறுக்கமுடியாத நீதியாகும் எனஎண்ணும் மனோபாவம் தப்பிதமானது. 'உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம்எடுப்பது அநீதி; அதனை உருக்குலைப்பது கொடுமை' என்று கூக்குரலிடும் மக்களின் ஆட்சேபனையில் நியாயம் தொனிக்கவில்லையா?

ஆம், இன்று பாடசாலைகளில் கைநீட்டின அரசாங்கம், நாளை பெற்றேரின் உரிமையையும் தட்டாமல் தட்டிப் பறிமுதல் செய்ய முன்வரும். மங்கையரே! மாண்புடையோரே! விழித்தெழுங்கள்! நாளை உங்கள் உரிமைகள்தான் காற்றில் பறக்கவிடப்படும். உங்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி கருகிவிடும். வருங்காலத் தாய்மாராகப்போகும் நங்கையரே! உங்கள் எதிர்கால வாழ்க்கையானது வரட்டுக்கௌரவம், மோசடி, ஏமாற்றுவித்தை இவற்றினூடே சிக்கித் தவிக்கப்போவதைச் சிந்திக்கவில்லையா? மோப்பம்கொள்ளும் நாய்போல் எங்கள் உரிமைகளை ஏப்பம் கொள்ளக் கண்ணி வைத்திருக்கும் அரசாங்கத்தின் செயல் உங்களை உணர்ச்சிவசப்படுத்தவில்லையா? பாவையரே! நீவிர் வீரத்தாய் பரம்பரையில் பிறந்த பெருமையை மறந்துவிட்டீர்களா?

பொறுமை திகழும், புன்முறுவல் பூத்த வதனத்தால் பகைவரின் கல்நெஞ்சைக் கரையச்செய்யும் வல்லமை பெற்ற மங்கையரே! நாம் உண்மை வீரிகள்தானு? நம் திருமறைக்கு உயிரைத் தியாகம்செய்யத் தயங்காத வீரிகள்தானு? வீரிகளானுல் தயாராகுவோம், நம் வீரத்தைச் சமாதான முறையில் வெளிக்காட்டி, நாஸ்தீகக் கொள்கையை விரட்டியடிப்போம். அற்பரின் வெருட்டுக்கு அஞ்சாது நிற்போம். அனல்விட்டெரியும் தேவசிநேகம் கொண்டுள்ள வீரிகளாகத் திகழ்வோம். கிறிஸ்துவின் அரசை மக்களின்உள்ளத்திலும், இல்லத்திலும் நிலைநிறுத்த வீறுகொண்டெழுந்து திருச்சபையின் வீராங்கனைகளாகத் திகழ்வோம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு, சங். அல்போன்சா சகோதரி இவர்களின் மன்றுட்டினுலும் என்னைவிட்டகன்றிருந்த எனது ஏகபுத்திரன் மீண்டும் என்னிடம் வந்ததையிட்டு நன்றி தெரிவித்து, இதனைப் பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கக் காலதாமதமானமைக்கு மன்னிப்பு வேண்டுகின்றேன். மென்மேலும் நல்லதேவன் என்ஏழைக்குடும்பத்தை ஆசீர்வதிக்குமாறு இரந்துமன்றுடுகிறேன்.

யேசுவின் அடிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய குருமாரின் முதற்பூசையும் குருப்பட்டாபிஷேகமும்

## ● யாழ்ப்பாணத்தில்

நெடுந்தீவைப் பிறந்தகமாகக் கொண்ட வண. T. A. சேவியர் தேவதாசன் சுவாமியவர்கள் சென்ற மார்கழிமாதம் 21-ந் திகதி யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலில் யாழ்நகர் மேற்றிராணியார் மகா வந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்களால் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெற்றார். அன்றுதினம் வண, T. A. சேவியர் தேவதாசன் சுவாமியவர்களின் பெற்றோர் இனசனர், நண்பரும், பெருந்திரளான குருமாரும், குருத்துவமாணவரும், சமுகமாயிருந்தனர்.

மறுநாள் புதியகுரவர் தோலகட்டி கன்னியர் மௌனசபைமடத்தில் மிகவும் அமைதியாகத் தனதுமுதற்பூசையை நிறைவேற்றினர். தோலகட்டி கன்னியர் மௌனசபையில் புதிய குரவரின் சகோதரி ஒருவர் கன்னியாஸ்திரியாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

27-12-60 காலை எட்டுமணிதொடக்கம் வாடைக்காற்றையும், கடுங்குளிரையும் பொருட்படுத்தாது ஏராளமான மக்கள் நெடுந்தீவு மாவிலித்துறைமுகத்தில் புதிய குரவரை வரவேற்குமுகமாக குழுமிநின்றனர். அன்று காலை ஒன்பது மணிக்கு நன்கு அலங்கரிக்கப்பட்ட **'ஜொய்வுள் ரோசறி'** என்னும் இயந்திரப்படகு மேற்படி குரவரையும், பரிவாரங்களையும் கொண்டு வந்து கரைசேர்க்கத் தனது ஜெனனபதியில் புதியகுரவர் ஆலயமணிகள் சப்திக்க, வெடிகள் அதிர நெடுந்தீவுப் பங்குக்குரவர் வண. எல். யோசேப் ஓ. எம். ஐ. அவர்கள் மாலைசூட்டி வரவேற்று அர்ச். சவேரியார் ஆலயத்துக்கு மேளவாத்திய வரிசைகளுடன் அழைத்துச் செல்லப்பட்டு இருகுரவர் துணைபுரிய, குருமாணவர், நெடுந்தீவுப் பிள்ளைகள் சேர்ந்த பாடகர் குழாமின் உதவியுடன் தமது முதற் திவ்விய பாடற்பூசையை நிறைவேற்றினார். திவ்விய பூசையின்போது பெருந்தொகையான மக்கள் புதிய குரவரின் கையால் திருவிருந்தருந்தினர். பூசைமுடிவில் வண. வீ. தியோகுப்பிள்ளை சுவாமியாரவர்கள் **'குருத்துவத்தின் மகிமை'** எனும் பொருள்பட மனவருட்சிக்குரிய அரியதோர் பிரசங்கம் செய்தார். முடிவில் புதிய குரவரால் பாப்பாசருடைய அப்போஸ்தொலிக்க ஆசீர்வாதம் அருளப்பட்டது.

பின்பு, நெடுந்தீவில் ஆசனக்கோவிலாக விளங்கும் அர்ச். யுவானியார் ஆலயத்துக்குப் புதிய குரவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு ஏற்கெனவே சித்தஞ் செய்யப்பட்ட பெண் பாடசாலை மண்டபத்தில் குருப்பிரசாதிகளும், குருமாணவரும், இனசனரும், ஊரவர்களும் பெருந்திரளாய்க் கூடிய சமுகத்தில் தமது தாய் தந்தையர் மத்தியில் உயராசனத்தமர வண. பங்குக்குரவர் தலைமையில் அவ்வூர்க் கிறீஸ்தவ மக்களால் ஓர் பொது வரவேற்புபசாரம் நடைபெறலானது. அவ்வமையம் அப்பங்கிலுள்ள ஏழு கோவிற்கட்டளைக்காரரும் மாலைசூட்டி நிற்கப் பாலர்கள் கீதம்பாடி வரவேற்றனர். நெடுந்தீவு நடுக்குறிச்சிக் கத்தோலிக்க ஆண்பாடசாலைத் தலைமை ஆசிரியர் க. த. ஞானப்பிரகாசம் நெடுந்தீவுக் கிறீஸ்தவமக்கள்பேரால் ஓர் வரவேற்புபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். இப்பங்குக் கிறீஸ்தவமக்கள் ஞாபகார்த்தமாக 'Biblical Encyclopaedia' என்ற நூல் வரவேற்புச்சபைக் காரியதரிசி திரு. க. அந்தோனிப்பிள்ளை ஆசிரியரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வண. பிதா எஸ். நல்லையா ஓ.எம்.ஐ. அவர்களும், மாஜி உடையார் திரு. க. குமாரசுவாமி, திரு. சி. ஜேம்ஸ், திரு. சு. அந்தோனிப்பிள்ளை, காவலூர்க்கவிஞர் ச. செல்வராசா ஆதியோர்களும் புதிய குரவரின் குடும்ப குண விசேஷங்கள்பற்றி வாழ்த்தியும், ஆசிகூறியும் உரைநிகழ்த்தினர். மக்கள் ஆனந்த ஆர்ப்பரிப்புமத்தியில் வண பிதா தேவதாஸ் அவர்கள் தமக்களித்த எதிர்பாராத பொதுவரவேற்புக்கு நன்றி தெரிவித்து ஆசீரளித்து நின்றார்.

ஈற்றில் வரவேற்புச்சபைக் காரியதரிசியவர்கள் இவ்வரவேற்பு வைபவத்தைச் சிறப்புடன் செய்ய உதவிய வரவேற்புச்சபையாருக்கும் இவ்வூர்க் கிறீஸ்தவ மக்களுக்கும் தமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்து நிற்க விழா இனிதே முடிபெய்தியது.

## ● திரிகோணமலையில்

காலஞ்சென்ற றூபேட் செனவிரெட்ணவின் புதல்வரான வண. நோஎல் செனவிரெட்ண சுவாமியவர்களுக்கு திரிகோணமலை மேற்றிராணியார் மேன்மைதங்கிய இக்னேஷஸ் கிளென்னி ஆண்டவர் அவர்களால் சென்ற மார்கழிமாதம் 21-ந் திகதியன்று குருப்பட்டாபிஷேகம் அருளப்பட்டது.

வண. நோஎல் சுவாமியவர்கள் நாவலப்பிட்டி சென்மேரிஸ்கல்லூரியிலும், யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கல்விபயின்றவர். கண்டியில் உள்ள பாப்பரசர் குருமடத்தில் சேர்ந்து பூனாவுக்குப் பாப்பரசர் குருமடம் மாற்றப்பட்டபோது அங்கும், பின்னர் அலகபாத்திலும் குருத்துவகல்வியைப் பூரணமாகப் பெற்று இலங்கைதிரும்பினார். இவர் திரிகோணமலை மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்.

திரிகோணமலையின் குவாட்டலூப் மாதா கோவிலில் வண. நோஎல் சுவாமியவர்கள் தமது முதற்பூசையை ஒப்புக்கொடுத்தார். குருப்பட்டாபிஷேகத்துக்கும், முதற்பூசைக்கும் பல்வேறு மேற்றிராசனங்களைச் சேர்ந்த 27 குருமாரும், குருத்துவ மாணவர் பத்துப்பேரும் சமுகமாயிருந்தனர். வண. நோஎல் சுவாமியவர்கள் கற்றனில் நத்தார்ப் பாடற்பூசை நிறைவேற்றினார்கள்.

## ● இரத்தினபுரியில்

கடந்தமாதம் அதாவது 1960-ம் ஆண்டு மார்கழிமாதம் 21-ந் திகதி இரத்தினபுரிக் கத்தோலிக்கருக்குப் பொன்னாளாகும். இரத்தினபுரிச் சரித்திரத்தில், அந்தநாட்டு மண்ணில் உதித்த ஒருவர் முதன்முறையாகக் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெற்றார். வண. பற்றிக் பெர்னாண்டோ சுவாமியவர்களுக்கு கொழும்பு அதிமேற்றிராணியார் வந்தனைக்குரிய தொமஸ் கூறே ஆண்டவர் அவர்களால் கொட்டாஞ்சேனை சந்தலூசியா தேவாலயத்தில் குருப்பட்டாபிஷேகம் அருளப்பட்டது.

இந்த மனோகரமான சம்பவமானது புதிய குரவர் தமது முதற்பூசையை மறுநாள் 22-ந் திகதி இரத்தினபுரியில் உள்ள சம்பேதுரு சம்பாவிலு தேவாலயத்தில்நிறைவேற்றியபோது உச்சகட்டத்தையடைந்தது. அந்தத் தேவாலயமானது மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தேவாலயத்தில் அவரது பெற்றோர் உறவினர்களும் மற்றும் விசுவாசிகளும் பெருந்திரளாய்க் கூடியிருந்தனர். வண. மோசெஸ் பெரெரா, வண. யேக்கப் பெர்னாண்டோ அவர்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் குருத்துவத்தின் மகத்துவம்பற்றிப் பிரசங்கம் செய்தனர். இதைத் தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் புதிய குரவருக்கு வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது. அதற்கு அங்கு கத்தோலிக்க சங்கத்தலைவரான டாக்டர் A. W. R. யுவக்கீம் அவர்கள் புதியகுரவரைவரவேற்றார். திரு. றபயேல் பெரெரா அவர்கள் விசாரணைப்பங்கு மக்கள்சார்பாகப் புதியகுரவருக்கு மலர்மாலை சூட்டினார்.

---

## விழிமின் இந்நேரம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தபோது, தாமோ அரசாளுவதற்குத் தகுந்தோர் அல்லரென்று காட்டிவிட்டனர்.

ஒரு தனிப்பாடசாலை முகாமைக்காரர் தன்னிடமிருந்து பாடசாலை காடையர்களால் பறிபடப்போகும் போது, அரசாங்கத்தின் உதவியும், பாதுகாப்பும் தமக்குக் கிடையாது என்றுஎண்ண இடமிருக்குமாயின், இது அவ்வரசாங்கத்துக்கு ஒரு பெரும் இழுக்காகவே யிருக்கும். அவ்விழுக்கை எதுவிதமும் அரசாங்கம் பரிகரிக்கத் தீவிரிக்கவேண்டும்.

ஒரு வழியினால்மாத்திரம் அப்படிச் செய்யலாம்: எப்பேர்ப்பட்டவனும் — அரசாங்கத்துடன் இணங்காதவனும் கூட — சட்ட விரோதிகளால்வரும் நெருக்கடியின்போது அரசாங்கத்தாரிடமிருந்து பாதுகாப்புப் பெறலாம் என்று திட்டவட்டமாயும், சனங்களின் நம்பிக்கைக்குரிய விதமாயும் ஆளுவோர் உறுதிப்படுத்துவதே அவ்வழியாகும்.

---

# கத்தோலிக்க ஆசிரியருக்குத் தடுப்புக் காவலா?

அரசாங்கத்தின் புதிய பாடசாலைக் கொள்கையை எதிர்த்துக் கத்தோலிக்க பெற்றோர் பாடசாலைகளைப் பூட்டி வைத்திருப்பதினால் அரசாங்கம் கத்தோலிக்க பிள்ளைகள் கல்வி கற்பதற்காகப் பாடசாலை இடமாற்ற ஒழுங்குகள் செய்துள்ளமை பற்பல விளைவுகளை உண்டாக்கியிருக்கின்றது.

இடமாற்ற வசதி செய்து கொடுத்த பாடசாலைகள் காலை எட்டு மணிக்கு ஆரம்பித்துப் பிற்பகல் பன்னிரண்டரை மணிக்கு முடிவதினால் அப்பாடசாலை மாணவரின் கல்வி நிலைகுலைந்து ஆசிரியரும், மாணவரும் பெரும் கஷ்டப்படுகிறார்கள்.

அரசாங்கத்தின் பாடசாலைக் கொள்கையை எதிர்த்துத் தத்தம் பாடசாலையிற் குடியேறியிருக்கும் பெற்றோர் அரசாங்கம் குறித்த வேறுபாடசாலைக்குத் தம்பிள்ளைகளைக் கல்விகற்க அனுப்புவார்களென எண்ணுவது பெரும் பேதமையாகும். மேலும், அண்மையில் உள்ள தம் பாடசாலைக்கே போகப் பின்னிற்கும் பிள்ளைகள், ஒருமைல், இரண்டுமைல், பத்துமைல் தானும் தொலைவில் உள்ள புதிய பாடசாலைக்குச் சென்று கற்க வசதி[illegible]த்தது அரசாங்கம் பிள்ளைகளின் [illegible]ல்வி விருத்தியைக் கருதியதாலா?

இடமாற்றஞ் செய்யப்பட்ட ஆசிரியர் குறிக்கப்பட்ட பாடசாலைகளுக்குச் சென்று பிற்பகல் ஒருமணிமுதல் ஐந்து மணிவரை ஆன நீண்ட நான்குமணி நேரம், வெறும் மேசைகளையும் வாங்குகளையும் பேரப் பேரப் பார்ப்பதும் வந்ததாகப் பேர்பதிவுசெய்வதும், இடைக்கிடைபாடசாலைமணிக்கூட்டை வறிதே நோக்குவதும், பாடசாலை வளவுக்கு வெளியே செல்லாது வளைய வளைய வருவதும், கடந்த கலவரகாலத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தலைவர்களின் அனுபவங்களைக் காட்டுவதாகும். ஒரு ஜனநாயக அரசாங்கம் கணிசமான அளவு பொதுசனங்களால் எதிர்ப்புக் காட்டப்படும்போது, அவ்வெதிர்ப்புக்குரிய காரணங்களை அலசி ஆராய்ந்து, சுமுகமான ஒருமுடிபுக்கு வாராது இலட்சக்கணக்கானபிள்ளைகளையும், ஆயிரக்கணக்கான ஆசிரியரையும் இடர்ப்படுத்திக் கல்வி வளர்ச்சியைத் தடைசெய்வது, உலகின் ஏனைய நாடுகள் பரிகசிப்பதற்கு ஏதுவாகிறது. இந்த நிலைமை நீடித்துச் செல்லச் செல்ல இது கத்தோலிக்கரைப் பழிவாங்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையாகும் என்று கூறப்படுவதற்கு இடமளிக்கும் என்பதை ஆட்சியாளர் கருத்திற் கொள்வது அவசியம்.

---

### குமுளமுனை சென். அன்ரனிஸ் சனசமூக நிலைய 8-வது வருடாந்த கூட்டம்

1961-ம் ஆண்டு தைமாதம் 2-ந் திகதி காலை 10 மணிவரையில் தலைவர் திரு பே. சந்தியாப்பிள்ளை அவர்கள் முன்னிலையில் தேவ ஆராதனையுடன் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்று சென்ற கூட்டஅறிக்கை வாசிக்கப்பட்டது. தலைவர் அவர்கள் சிறு சொற்பொழிவாற்றியதன்பின் புது உத்தியோகஸ்தர்களை முறையே தலைவராக, திரு. ச. ஞானப்பிரகாசமும், உபதலைவராக, திரு. அ. சாமிநாதனும் கௌரவ காரியதரிசியாக, திரு. அ, தேவசகாயம்பிள்ளையும், உப காரியதரிசியாக திரு. அ. எம்மனுவேலும், தனாதிகாரியாக, செல்வன் சூ. சாமிநாதனும், அங்கத்தவர்களாக, செல்வன் மு. வ. எற்வேட், திரு. ந. சுப்பிரமணியம், அ. முடியப்பு, சூ. பத்திநாதன் என்பவர்களும், சங்கப்பாதுகாவலராக, செல்வன் அ. மரியாம்பிள்ளையும், செபத்தலைவராக, திரு. ம செபமாலையும் தெரிவுசெய்யப்பட்டுத் தேவ ஆராதனையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கௌரவகாரியதரிசி.

---

**செப அப். சபை வெளியீடு**

### தைமாதம்

**வேதபோதக கருத்து: ஆராதனை முறையில் தகுந்தவிதமாக நிறைவேற்றப்படும் திவ்விய பூசையின் மூலமாக எல்லாமக்களும் கிறிஸ்துவின் உண்மையான திருச்சபையில் வந்துசேரும்படியாக மன்றாடிக் கொள்வது.**

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Missoin Premises, Main Street, Jaffna, on Thursday January 12-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org